RE/MAX BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 07 ஒக்டோபர் 2022 இதழ்:- 24

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# திருக்கோணேஸ்வரத்துக்கு உதவ இந்திய அரசாங்கம் காத்திருக்கிறது!



திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றது என இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே 02 ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலைக்கு சென்றிருந்தார். இதன் போது வரலாற்று பிரசித்தி பெற்றதும் தேவாரப் பாடல் பெற்றதும் அண்மைக் காலமாக ஆக்கிரமிப்பு பிரச்சனையை எதிர் கொண்டுள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கும் சென்றார். (7ம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப இலங்கைக்கு நல்ல சந்தர்ப்பம் - கனடிய தூதுவர் சுட்டிக் காட்டு!



பெரும்பான்மையான மக்கள் நாட்டில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலின் அவசியத்தை உணர்ந்துள்ளனர். கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வரும் இலங்கைக்கு அதிலிருந்து மீண்டெழ சர்வதேச சமூகம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அதன் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பிக் (7ம் பக்கம் பார்க்க)

# உலகின் பட்டினியால் வாடும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைவு

# நாடு மீண்டெழ இனப் பிரச்சனைக்குத் தீர்வு தேவை! ஓய்வு நிலையில் சந்திரிகாவுக்கு பிறந்த ஞானோதயம்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



18 Years Real Estate Experience

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence / Morningside


**Scarborough** $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route

### Sheppard / Markham



**Scarborough** $449,900
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space

### Sheppard & Warden


**Scarborough** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

### 401 & Mccowan


**Mississauga** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance

### Warden & St Clair



**Scarborough** $629,000
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo

### Markham & Eglinton



**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances

### John W Taylor / Ferris Lane


**New Tecumseth** $839,000
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors

### Simcoe & Ritson



**Oshawa** $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors

### Altona / Finch


**Pickering** $979,000
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage

### Harmony & Taunton


**Oshawa** $1,224,888
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop


### Donald Cousens & Hwy 7


**Markham** $1,488,888
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings


### Hwy 48/Castlemore



**Markham** $3,600
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station

### Hwy 7/Donald Cousens



**Markham** $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft

### Church / Rossland



**Ajax** $3,175
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood

### Edenbrookhill / Sandalwood



**Brampton** $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Markham Rd & 16th Ave



**Markham** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடா வாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!



என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே! திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 11 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம். பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 10 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 423 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு 7 பிள்ளைகள் பல் கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் இம்மாதம் 23 ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றவுள்ள நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். (விபரங்கள் 12ம் 13ம் பக்கத்தில் உள்ளது)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிக் பெரிய உதவியாக இருக்கும்.

எமது கனடிய மண்ணிலும் அனைத்துமே விலையேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் 19 ஒக்டோபருக்கு முன்னதாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இலங்கையில் கனடா மாணவர் விசா விண்ணப்பம் 10 மடங்கு அதிகரிப்பு!



இலங்கையில் கடந்த ஐந்து வருடங்களில் பெறப்பட்ட மாணவர் வீசா விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் பத்து மடங்கு அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விண்ணப்பதாரர்கள் எதிர் கொள்ளும் கனேடிய விசாக்கள் தாமதம் குறித்து அவர் கருத்து தெரிவிக்கும் போது, கொவிட் தொற்றுநோய், தொற்று நோய்க்குப் பிந்தைய தேவை அதிகரிப்பு மற்றும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களின் விளைவாக இது இருப்பதாக கூறினார்.


எனினும், கனேடிய உயர் ஸ்தானிகராலயம் தனது வளங்களில் இதேபோன்ற அதிகரிப்பு இல்லாமல் கடந்த ஐந்து ஆண்டுகளில் மாணவர் விசா விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் பத்து மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இது சவால்களை முன் வைக்கிறது என்று கூறிய டேவிட் மெக்கின்னன், விண்ணப்பதாரருக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு கடினமான காலக்கெடு இருக்கும் போது, உயர் ஸ்தானிகராலயம் கணக்கில் எடுத்துக் கொள்ள முயற்சிப்பதாக கூறினார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கனடா அரசாங்கத்துடன் தீவிரமான கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிச் செல்லும் இலங்கைக்கான விண்ணப்பதாரர்கள் தங்கள் விசாவைப் பெறுவதற்கு விரைவில் விண்ணப்பிக்கவும், பயணத்திற்கான காரணம் குறித்து தெளிவாக இருக்கவும் கனேடிய உயர் ஸ்தானிகர் விண்ணப்பதாரர்களை அறிவுறுத்தினார்.

# 2024ம் ஆண்டிற்கான அமெரிக்க பன்முகத் தன்மை விசா திட்டத்திற்கு 05 ஒக்டோபர் 2022 முதல் 08 நவம்பர் 2022 வரை விண்ணப்பிக்கலாம்




2024ஆம் ஆண்டிற்கான அமெரிக்க பன்முகத்தன்மை விசா திட்டம் (**US Diversity Visa Program**) 05 ஒக்டோபர் 2022 முதல் விண்ணப்பத் திற்காக திறக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. பன் முகத்தன்மை விசா திட்டம் மூலம் ஒவ்வொரு வருடமும் எழுந்தமானமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 50,000 இற்கும் மேற்பட்ட நபர்கள் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.

எனினும் நிரந்தர குடியுரிமை பெறுவதற்காக அமெரிக்காவிற்கு அதிகளவில் புலம் பெயர்ந்தோரை அனுப்பாத நாடுகளில் இருந்து மட்டுமே இவர்கள் தெரிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிரீன் கார்ட் என அறியப்படும் பன்முகத்தன்மை விசா திட்டமானது 05 ஒக்டோபர் 2022 இரவு 09.30 மணி முதல் திறக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் இந்த விடயத்தை டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளது. அத்துடன் இதற்கான விண்ணப்பங்கள் எதிர் வரும் நவம்பர் 8ஆம் திகதி இரவு 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்,
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# மனித உரிமை பேரவையில் மீண்டும் இந்தியா தெரிவித்துள்ளது என்ன?

13வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துதல் அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு மாகாணசபை தேர்தல்களை முன்கூட்டியே நடாத்துதல் குறித்த தனது உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது

இலங்கை குறித்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பிற்கு முன்னர் இந்தியாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி இந்திர மணிப்பாண்டே இதனை தெரிவித்துள் ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது

அருகில் உள்ள அயல்நாடு என்ற அடிப் படையில் 2009ம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையின் புனர்வாழ்வு மீள்குடியேற் றம் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளிற்கு இந்தியா பெரு மளவு உதவியை வழங்கியுள்ளது.

மிகச் சமீபத்தில் ஜனவரிக்கு பின்னர் இலங்கை மக்கள் சமீபத்தைய பொரு ளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு உதவுவதற்காக இந்தியா முன்வந்து முன்னர் ஒரு போதும் இல்லாத உதவியை வழங்கியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் இந்தியா எப்போதும் தமிழ்மக்களின் சமத்துவம் நீதி கௌரவம்அமைதி ஐக்கியம் ஆகிய அபிலாசைகளிற்கு ஆதரவளித்தல் இலங்கையின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு ஆதரவளித்தல் என்ற இரு அடிப்படை கொள்கைகளால் வழி நடத்தப்பட்டு ள்ளது.

13வது திருத்தத்தை நடைமுறைப்படுத் துதல் அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு மாகாணசபை தேர்தல்களை முன் கூட்டியே நடாத்துதல் குறித்த இலங்கை அரசாங்கத்தின் உறுதி மொழிகளை நாங்கள் கருத்தில் எடுத்துள்ளோம்.



இது தொடர்பான முன்னேற்றம் போது மானதல்ல என நாங்கள் கருதுகின்றோம்.

இதனடிப்படையில் இந்த உறுதிமொழி களை விரைவில் நடைமுறைப்படு த்துவது குறித்து அர்த்தபூர்வமாக இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின் றோம்.

அனைத்து இலங்கையர்களிற்கும் பொருளாதார செழிப்பை ஏற்படுத்துவ தும் இலங்கையில் தமிழ் மக்களின் கௌரவம் அமைதி மற்றும் பொருளதார வளம் ஆகியவற்றிற்கான நியாபூர்வமான அபிலாசைகளை நிறைவேற்றுவதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

இலங்கையில் தமிழர்களின் நியாயபூர்வ மான அபிலாசைகளை நிறைவேற்றுவது அனைத்து இலங்கையர்களிற்குமான பொருளாதார செழிப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக இந்தியா இலங்கை மற்றும் சர்வதேச சகாக்களுடன் இணை ந்து செயற்படும் என்றார்.

இதேவேளை தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள சீனா இலங் கையின் சுதந்திரத்திற்கான தனது உறுதி யான ஆதரவை வெளியிட்டுள்ளது. தொடர்புபட்ட நாட்டின் இணக்கம் இல்லாமல் உருவாக்கப்பட்டுள்ள இந்த தீர்மானம் அரசியல் மயமாக்கலின் விளைவு என சீனா தெரிவித்துள்ளது.

## உள் விவகாரங்களில் தேவையில்லாமல் ஜெனிவா தலையீடு! ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி செய்தி யாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார குற்றங்களுக்கு யாரேனும் பொறுப்புக் கூறினால் அவர்கள் மீது நாட்டின் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார குற்றங்கள் என்ற சொல்லை இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், இலங்கைக்கு இப்போது தேவைப்படுவது பொருளாதார சீர் திருத்தங்கள் மாத்திரமே என்றும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கைக்கு கல்வி கற்பிப்பதற்கான நிபுணத்துவம் ஐக்கிய நாடுகளின் உரிமைகள் பேரவைக்கு இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். எனினும், பொருளாதார சீர்திருத்த ங்களில் நிபுணத்துவம் பெற்றவர்கள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவே என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் கடன் மறுசீரமைப்பு நிபுணர்களுடன் இணைந்து பொருளா தார சீர்திருத்தங்களுக்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு ள்ளதாக வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கு இடமளிக்காமல் பலவந்தமாக இலங்கையை தமது நிகழ்ச்சி நிரலில் வைத்தி ருப்பதாகக் கடுமையாகச் சாடிய அவர், அது இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள் வதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!
08,15 ஒக்டோபர் 2022 சனி விரத நாட்களாகும்.

08 ஒக்டோபர் 2022

4வது சனி விரத உபயம்:- கந்தசாமி மதியாபரணம் குடும்பம்

07 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை
பிரதோஷ விரதம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# நாடு மீண்டெழ இனப் பிரச்சனைக்குத் தீர்வு தேவை! ஓய்வு நிலையில் சந்திரிகாவுக்கு பிறந்த ஞானோதயம்!



பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டால் மாத்திரம் நாடு மீண்டெழாது. தேசிய இனப்பிரச் னைக்கும் தீர்வு கண்டே ஆகவேண்டும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடு வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு ராஜபக்ஷக்களே முழுக்காரணம். இதை எவரும் மறுதலிக்க முடியாது. ராஜபக்ஷ யுகம் மீண்டும் ஏற்பட மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. மேலும், நாட்டின் ஆட்சியையே தீர்மானித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி இன்று பைத்தியக்காரர்கள் சிலரின் கைகளிலேயே உள்ளது. இதற்கு விரைவில் முடிவு கட்டியே தீருவேன்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த நாட்டில் இனப்பிரச்னை இருப்பதால் தான் மூன்று தசாப்த காலங்கள் போர் நீடித்தது. இந்தக் கொடிய போரால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதனால் தான் அவர்கள் சர்வதேசத்திடம் நீதி தேடி அலைகின்றார்கள். எனவே, தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு கண்டால் தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு அனைவரும் ஓரணியில் ஒரே திசையில் பயணிக்க முடியும்.

தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணா விட்டால் சிங்களவர்கள் ஒரு திசையிலும், தமிழ் – முஸ்லிம் மக்கள் வேறொரு திசையிலும் பயணித்துக் கொண்டே இருப்பார்கள். இதனால் தான் நாளுக்கு நாள் பிரச்சினைகள் உருவாகின்றன கருத்து மோதல்களும் ஏற்படுகின்றன.

இந்த நிலைமை மக்களுக்கும் அழகு அல்ல. நாட்டுக்கும் நன்மை அல்ல.எனவே, எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் தேசிய இனப்பிரச்னைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும். மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியும், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியும் வளமிக்களமது நாட்டைச் சீரழித்து விட்டது. ஒட்டுமொத்தத்தில் ராஜபக்ஷ குடும்பமே எமது நாட்டு வளங்களைச் சுரண்டித் தின்றுவிட்டனர்.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்கள், தங்கள் குற்ற உணர்வை உணர்ந்து கொதித்தெழுந்தமையால் தான் ராஜபக்ஷக்களின் யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

எனினும், ஏதோவொரு வழியில் மீண்டும் தங்கள் ஆட்டங்களைக் காண்பிக்க ராஜபக்ஷவினர் முயல்கின்றனர். இதற்கு எவரும் துணைபோகக் கூடாது. அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் எவரும் அங்கம் வகிக்க இடமளிக்கக்கூடாது. விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும். நிலையான அரசு அமைய வெளியிலிருந்து எனது பங்களிப்பை வழங்க நான் தயாராகவுள்ளேன்.

எனது தந்தை, தாய் வளர்த்தெடுத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியை நான் இறுதி வரையில் பாதுகாத்தே வந்தேன்.ஆனால், இன்று சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைமையைப் பார்க்கும் போதுமிகவும் கவலையளிக்கின்றது. மனநோயாளர் விடுதிகளில் இருக்க வேண்டியவர்கள் இன்று கட்சியின் தலைமைப் பதவிகளில் இருக்கின்றனர். இந்தக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை.கட்சியின் கொள்கைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதனால் திறமைமிக்க பலர் கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர். நாட்டின் ஆட்சியையே தீர்மானித்த சிறிலங்காசு தந்திரக் கட்சி இன்று பைத்தியக்காரர்கள் சிலரின் கைகளிலேயே உள்ளது.இதற்கு விரைவில் முடிவு கட்டியே தீருவேன் .– என்றார்.

# ஜெனிவா தீர்மானம் தொடர்பில் இந்தியா செய்ய வேண்டியது என்ன?

மாற்றத்தையும் பொறுப்புக்கூறலையும் கோரும் இலங்கையர்களிற்கு ஆதரவளிப்பதென்றால் இந்தியாவும் ஏனைய உலக நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரித்து ஆராய்வதற்கான ஐக்கிய நாடுகள் திட்டத்தை நீடிப்பதற்கான ஆணையை இந்த தீர்மானம் கோருகின்றது. இலங்கையின் பொருளாதார சமூக நெருக்கடியை தொடர்ந்தும் காண்காணிக்கவேண்டும் எனவும் தீர்மானம் ஐநாவை கோருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்

எனினும் இலங்கை தான் மனித உரிமைகளை பாதுகாப்பதாக தெரிவித்து இதனை எதிர்க்கின்றது.

இலங்கை பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பற்றாக்குறைகளிற்கு தீர்வை காண்பதற்கு அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்த இந்தியா இலங்கையின் மனித உரிமை தொடர்பான விவாதத்தின் போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு அரசியல் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு அளவிடக்கூடிய முன்னேற்றம் இல்லை என தெரிவித்திருந்தது என மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.




இலங்கையில் போதியளவு மனித உரிமை பாதுகாப்பு இல்லாதமை குறித்து பல உலக நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன என தெரிவித்துள்ள மீனாக்சி கங்குலி இலங்கையில் மாற்றத்தையும் பொறுப்புக்கூறலையும் கோரும் இலங்கையர்களிற்கு ஆதரவளிப்பதென்றால் இந்தியாவும் ஏனைய உலக நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.

# இலங்கை அடிப்படை உரிமைகளை மதிக்க வேண்டும்



இலங்கை அரசாங்கம் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளை மதித்து செயற்படுவது அவசியமானது என ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வொன் டெர் லேயன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு எப்போதும் ஆதரவளிக்க ஐரோப்பிய ஒன்றியம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்த அவர்

ஜிஎஸ்பி பிளஸ் உறுதிமொழிகளை ஐரோப்பிய ஒன்றியம் மிக விரைவில் ஆராயும் எனவும் அவர் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கையர்களின் குறுகிய, நீண்டகால தேவைகளை உறுதிப்படுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்தி ஜிஎஸ்பி பிளஸ் தொடர்பான அறிக்கை

இந்த ஆண்டின் இறுதியில் அல்லது 2023ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# தமிழ்மக்களிடமும் மன்னிப்பு கோருவீர்களா?

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தி விவசாயம் செய்ய முற்பட்டமை தவறானதொரு தீர்மானமென்று ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கட்சிக் குழுக் கூட்டமொன்றில் பேசுகின்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். கோட்டாபயவால் ஏற்பட்ட அரசியல் சரிவிலிருந்து மீண்டெழும் நோக்கிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறான பகிரங்க மன்னிப்புக் கோரலை முன்னெடுக்கின்றார்.

இதேபோன்று தமிழ் மக்கள் தொடர்பில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கும் நாமல் ராஜபக்ஷ மன்னிப்பை கோருவாரா அதற்கான அரசியல் முதிர்ச்சி அவரிடம் இருக்கின்றதா? 2009இல் யுத்தம் நிறைவுற்றதை தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அரசியல் தீர்வு தொடர்பில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது.

குறிப்பாக போர் முடிவுக்கு பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூனுடனான சந்திப்பின் போது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வை காண்பதாக மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதியளித்திருந்தார். 13 'பிளஸ்' தொடர்பில் பேசியிருந்தார். அதேபோன்று இந்தியாவுக்கும் அவ்வாறான வாக்குறுதிகளை மகிந்த வழங்கியிருந்தார். ஆனால், எதுவுமே நடைபெறவில்லை.

பண்டா செல்வா மற்றும் டட்லி செல்வா உடன்பாடுகள் ஒருதலைப் பட்சமாகக் கிழித்து வீசப்பட்டமை போன்றே, மகிந்த ராஜபக்ஷவின் வாக்குறுதிகளும் காணாமல்போயின. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அவரும் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்குத் தயாராக இருக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் தொடர்பில் பேசினார். ஆனால், கோட்டபாய ராஜபக்ஷவோ, அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தையே முற்றிலுமாக இல்லாமல் ஆக்குவதற்கான வாய்ப்புகளைத் தேடினார்.

தன்னையொரு சிங்கள பௌத்த தலைவராக பிரகடனம் செய்தார். இலங்கைத் தீவை ஒரு பௌத்த குடியரசாக மாற்றும் திட்டங்களை முன்னெடுக்க முற்பட்டார். பொருளாதாரப் பிரச்னைகள் மட்டும் தான் இருக்கின்றன. தமிழ் மக்களுக்கான பிரத்தியேக அரசியல் பிரச்னைகளென்று எதுவுமில்லை என்றார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ வர்தன் முன்னிலையிலேயே, 13ஆவது திருத்தச் சட்டத்தில் நிறையும் குறையும் உண்டென்று கூறினார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கோட்டாபயவின் தவறுகள் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ மன்னிப்புக் கோரியிருக்கின்றார்.

தாங்கள் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்க்க முற்பட்டதாகவும் ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும், அண்மையில் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அது உண்மையாயின் அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கூட்டமைப்பின் ஒத்துழைப்பு தேவையில்லையே.

ஒருவேளை கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதை எதிர்த்தாலும் கூட அதனை செய்து முடிப்பதில் அரசாங்கத்துக்கு எந்தத் தடையும் இல்லையே! இப்போதும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பொதுஜன பெரமுனவிடம் தானே உண்டு.

இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வரும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் இப்போதும் எந்தத் தடையும் இல்லையே! கூட்டமைப்பால் இதனை தடுக்கவும் முடியாதே!

ஒருவேளை கூட்டமைப்போ ஏனைய தமிழ் கட்சிகளோ இதனை தடுக்க முற்பட்டால் பந்தை இந்தியாவின் பக்கமாக தள்ளி விடலாமே!

உண்மையிலேயே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் நோக்கம் ராஜபக்ஷக்களுக்கு இருந்திருக்குமாயின், அதனை செய்வதில் ராஜபக்ஷக்களுக்கு எவ்வித தடையும் இருந்திருக்கவில்லை.

தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக விடயங்களை முன்னெடுத்திருந்தாலும் கூட மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பல்வேறு பிரச்னைகளை தீர்திருக்க முடியும்.

# எங்கள் இனத்தின் மீது திட்டமிட்டு சிங்களப் பேரினவாதம் திணிப்பு!

## ரணில் பதவியேற்றும் தொடர்கின்றது என இந்தியத் தூதுவர் முன் கலையரசன் பேச்சு!




திருகோணமலை மாவட்டத்தைக் குறி வைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை மிக வேகமாக ஆரம்பித்துள்ளது. தொல்லியல், வனபரிபாலனம் எனத் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்டு கூறு போடுகின்ற நிலைமையே நடந்து கொண்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம் பெற்ற இந்திய உயர்ஸ்தானிகருடனான நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இந்தியா என்கின்ற நட்புறவோடு நீண்ட காலமாக இலங்கைக்குப் பல உதவிகளை வழங்கிய நாடாக அண்மையில் உள்ள நாடு என்ற அடிப்படையில் இந்தியா அமைந்துள்ளது. இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய கலை கலாசார அம்சங்களோடு வாழ வேண்டும் என்று நினைக்கின்றோம் ஆனால் திட்டமிட்டு எம்மினத்தின மீது சிங்களப் போனவாதம் திணிப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலே திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் மூலம் எமது புனித தலத்தின் புனிதத்தைக் கெடுப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இந்திய உயர்ஸ்தானிகரின் திருகோணமலை மாவட்ட வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

அது மாத்திரமல்லாமல் திரியாய் என்று சொல்லப்படுகின்ற கிராமத்தை மையமாக வைத்து தொல்லியல் திணைக்களம், வனபரிபாலன இலாகா போன்ற திணைக்களங்களூடாகத் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்டு கூறு போடுகின்ற நிலைமையே நடந்து கொண்டிருக்கின்றது. மிக வேகமாக இந்த மாவட்டத்தைக் குறி வைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை ஆரம்பித்துள்ளது. இதனை இந்த நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற செயற்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து இந்த நாட்டிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

நாட்டின் புதிய ஜனாதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட போதும் ராஜபக்ச காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அந்த சிங்கள அரச தீவிரவாத செயற்பாடு மிகவும் மோசமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர் பதவிக்கு வந்தபோது இந்த நாட்டில் சமாதானம், சமத்துவம், சகோதரத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் (22ம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான தீர்மானம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியுள்ளது குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக 20 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பொலிவியா சீனா, கியூபா, எரித்திரியா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வெனிசூலா ஆகிய 7 நாடுகளும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்திருந்தன. அத்துடன் பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, கொரியா, உக்ரைன், அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

இந்த வாக்களிப்பில், இந்தியா, ஜப்பான், பிரேசில், கட்டார் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட 20 உறுப்பு நாடுகள் கலந்துகொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இன்று இடம் பெற்ற இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னரான நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் கருத்துவெளியிட்டிருந்தார்.



அதில் இலங்கை மீதான போர்க்குற்றங்களுக்கு உள்நாட்டு பொறியின் கீழ் தீர்வுகாண எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# திருக்கோணேஸ்வரத்துக்கு உதவ இந்திய அரசாங்கம் காத்திருக்கிறது!

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றது என இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.



இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே 02 ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை திரு கோணமலைக்கு சென்றிருந்தார். இதன் போது, வரலாற்று பிரசித்தி பெற்றதும் தேவாரப் பாடல் பெற்றதும் அண்மைக் காலமாக ஆக்கிரமிப்பு பிரச்சனையை எதிர்கொண்டுள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கும் சென்றார்.

பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட அவர் ஆலயத்தின் நிர்மாண, நிர்வாக பணிகளையும் பார்வையிட்டார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.மேலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு நான் வருகை தந்திருக்கிறேன். இன்றைய நாள் ஒரு விசேட நாள் நவ ராத்திரி காலம் விரதம் கடைப் பிடிக்கப் படும் அதே காலத்தில் காந்தி ஜெயந்தி தினமும் நடைபெறுகிறது. இந்த ஆலயத்தினுடைய தொன்மையான வரலாறு பூர்வீகமான விடயங்கள் அனைத்தையும் அறிஞர்களும் ஆலயநிர்வாகிகளும் நிறைந்த தெளிவுடன் எனக்கு அறிய தந்திருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கிறது என்பதை மிகத்தாழ்மையாக தெரிவித்துக் கொள் கிறேன். இந்த ஆலயம் புனிதமானது மாத்திரமில்ல நாயன்மார்களால் பாடப் பட்ட ஓர் ஆலயம் என்பதையும் நான் அறிவேன். அந்த வகையில் இந்த ஆல யத்தின் எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும். இங்கு ஓர் இராஜகோபுரம் அமைக்கப்பட இருக்கின்றதையும் ஆலய நிர்வாகிகள் எனக்கு தெரிவித்தார் கள். அந்த விடயம் தொடர்பாகவும் இந்திய அர சாங்கம் கவனம் செலுத்தும் என்றார்

# நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப இலங்கைக்கு நல்ல சந்தர்ப்பம் - கனடிய தூதுவர் சுட்டிக் காட்டு!

பெரும்பான்மையான மக்கள் நாட்டில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூற லின் அவசியத்தை உணர்ந்துள்ளனர். கடுமையான பொருளாதார நெருக்கடி யில் தத்தளித்து வரும் இலங்கைக்கு அதிலிருந்து மீண்டெழ சர்வதேச சமூகம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அதன் பொரு ளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும் என்பதுடன், நாட்டில் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி பொறு ப்புக்கூறலின் அவசியத்தை உணர்ந்து முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என இலங்கைக்கான கனேடிய தூதுவர் டேவிட் மக்கினன் தெரிவித்தார். இணை யத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி யிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நான் பல திவாலான நாடுகளில் பணியாற்றி யுள்ளேன். நாம் இங்கு தான் வசிக்கி றோம். கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் எமது தேவைகளை யும் பூர்த்தி செய்துக்கொள்கிறோம்.

நவீன யுகத்தில் இலங்கை மிகவும் கடு மையான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. நாடு முழுவதும் பயணம் செய்வதால் வடக்கு, கிழக்கு தெற்கு என மக்கள் எதிர் கொள்ளும் பாரிய பிரச்னைகளை காணக் கூடியதாக வுள்ளது.

பல வருடங்களாக இருந்த நெருக்கடி தான் தற்போது உக்கிரமடைந்துள்ளது. இதிலிருந்து இலங்கை மீண்டெழவும் சாதகமான முடிவுகளை எடுக்கவும் ஐரோப்பா மற்றும் சர்வதேச சமூகம் பல்வேறு உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருகிறது.


இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை கனடா தொடர்ந்தும் ஊக்குவித்து வருகிறது. மனித உரிமை கள் பேரவையில் இது குறித்து எமது நிலைப்பாடுகளையும் பொறுப்புக்கூறலின் அவசியத்தையும் தொடர்ச்சியாக வலி யுறுத்தியுள்ளோம். பல்வேறும் சமூகங்கள் வாழும் கனடாவில் நல்லிணக்கம் மற்றும் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையின் அவசியத்தையும் பாடத் தையும் நாம் உணர்ந்துள்ளோம். கடந்த 60, 70 வருடங்களாக இந்த செயல் பாட்டில் நாம் அனுபவத்தை கொண்டு ள்ளோம். பொருளாதார நெருக்கடிகயை தீர்ப்பது போன்று சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் பொறு ப்புக்கூறலும் அவசியமாகும்.

இலங்கை என்பது பன்மைத்துவமான சமூக கட்டமைப்பை கொண்ட நாடா கும். மிகவும் சிறப்பான வரலாற்றை கொண்ட ஒரு நாடு. இலங்கையில் பல காலகட்டங்களில் சமூக வளர்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக் கத்தின் அவசியத்தை பெரும்பான்மை யான மக்கள் இன்று உணர்ந்துள்ளனர். இது இலங்கைக்கு சிறந்ததொரு சந்தர் ப்பமாகும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழவும் நாட்டில் நல்லி ணக்கத்தை ஏற்படுத்தவும் இந்த சந்தர் ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண் டும் என்றார்.



## இனிமேல் யாழ்.கோட்டைப் பகுதி அடிக்கடி சுற்றி வளைக்கப்படும்?



யாழ்ப்பாண கோட்டை பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராக பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தின ருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் திடீர் சுற்றிவளை ப்பு கண்காணிப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்படுமெனவும் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித் தார்.

யாழ்ப்பாண கோட்டை பகுதியை பார்வையிட்ட மாநகர முதல்வர். அங்கு இடம் பெற்று வரும் அநாகரிக செயற் பாடுகளை கேட்டறிந்து கொண்டது டன் நேரடியாக அதனை அவதானித் தார். இதன் பின்னராக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், கோட்டை பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள் இனங் காணப் பட்டால், அவர்களை கடுமையாக எச்ச ரித்து பொலிஸார் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

யாழ்ப்பாண கோட்டை பகுதி சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் மற்றும் போதை பொருள் பாவனை மையமாக மாறிவருகிறது. கோட்டை பகுதியை சுற்றியுள்ள பற்றைக் காடுகளை அகற்று மாறு நீதிபதிகள் யாழ் மாநகர சபை யிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆகவே கோட்டை பகுதியை சுற்றி யுள்ள பற்றைக்காடுகளை உடனடியாக அகற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

யாழ்ப்பாணக் கோட்டை பகுதி தொல்லி யல் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால் தொல்லியல் திணைக்களத் தினருடன் பேசி இதற்கான நடவடி க்கை எடுக்க உள்ளோம்.

அவர்களும் இதற்கு சம்மதத்தினை தெரிவித்துள்ளனர் எனவும் யாழ்.மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடித் தீர்வுடன் மனித உரிமைகளுக்கும் தீர்வு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் -மன்னிப்புச்சபை

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளின் போது இலங்கை அதிகாரிகளும் சர்வதேச சமூகமும் மனித உரிமைகளை முழுமையாக இணைத்துக் கொள்ள வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தனது புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் பட்டினி மந்தபோசாக்கு மோசமான வறுமை ஆகியவற்றை நோக்கி தள்ளப்படும் நிலையில் சுகாதார வசதிகள் குறித்து கடும் கவலைகள் எழுந்துள்ள நிலையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை இதனை தெரிவித்துள்ளது.

நாங்கள் முழுமையான வீழ்ச்சியை நெருங்கி விட்டோம் – இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் உணவு சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பிற்கான உரிமைகளை பாதுகாப்பது என்ற புதிய அறிக்கையை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

இலங்கை மக்கள் கடந்த பல மாதங்களாக கடும் உணவு தட்டுப்பாடுகளால் நெருக்கடியில் சிக்குண்டுள்ளனர் சுகாதார சேவைகளை பெறுவதில் கடும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் அதேவேளை மிக அதிகளவு பணவீக்கம் ஏற்கனவே காணப்பட்ட சமத்துவமின்மையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என பொருளாதார சமூக கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆராய்ச்சியாளர் சங்கிட்டா அம்பாஸ்ட் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியின் பரந்துபட்டமனித உரிமை பாதிப்புகளிற்கு இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் வேகமாக தீர்வை காணவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் இந்த நிலை மக்கள் உரிமைகளை பெறுவதை ஈவிரக்கமற்ற விதத்தில் பாதித்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலைமைக்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளின் போது இலங்கை சர்வதேச தலைவர்கள் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு எடுக்க வேண்டிய பல நடவடிக்கைகள் குறித்தும் மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சர்வதேச உதவிகளை அதிகரிப்பது முழுமையான சமூக பாதுகாப்பை உறுதி செய்வது கடன்களை இரத்துச் செய்வது உட்பட கடன் நிவாரணம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் பரிசீலிப்பது போன்ற பரிந்துரைகளை சர்வதேச மன்னிப்புச்சபை முன்வைத்துள்ளது.

ஜீன் மாதத்திற்கும் செப்டம்பர் மாதத்திற்கும் இடையில் 55பேருடன் நேர் காணல்களில் ஈடுபட்டதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஆபத்தான வேலையில் உள்ள மக்கள் தினசரி கூலித்தொழிலாளர்கள் மீன்பிடித்துறை மற்றும் தோட்டங்களில் பணிபுரிபவர்கள் குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய மலையதமிழர்கள் பொதுசுகாதார ஊழியர்கள் சிவில் சமூக குழுக்கள் மனிதாபிமான அமைப்புகள் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தனிப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களை தொடர்பு கொண்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் மருத்துவரை பார்க்க முடியாது இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வரும் நிலையில் உயிர்ஆபத்தை ஏற்படுத்தும் மருந்துகள் மருத்துவ பொருட்களின் பற்றாக்குறை இலங்கை மக்களிற்கு பெரும் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது.

கடந்த சில மாதங்கள் இலங்கையின் சுகாதார துறைக்கு அதிர்ச்சியளிக்கும் சவால்களை கொண்டுவந்துள்ளது. மருத்துவ தாதிமார்கள் கையுறைகள் இன்றி நோயாளிகளிடமிருந்து இரத்தத்தை சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என சுகாதார பணியாளர் ஒருவர் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு தெரிவித்தார்.

## உலகின் பட்டினியால் வாடும் நாடுகளில் இலங்கையும் இணைவு!



உலகில் பட்டினியால் வாடும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. உலக உணவுத் திட்டத்தால், கடந்த ஜீன் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில், முதல் தடவையாக பட்டினியால் வாடும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையிலும், இலங்கை பட்டினி பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பற்ற நிலை காணப்படும் நாடுகளில் ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, நைஜீரியா, தென் சூடான், சோமாலியா மற்றும் யேமன் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. அத்துடன், இலங்கையும் இந்த அபாய கட்டத்தை நெருங்கி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையானது கடும் உணவு தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்துள்ளது என உலக உணவுத் திட்டத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டி சர்வதேச நாணய நிதியம் சுட்டிக் காட்டியுள்ளது.

குறித்த அறிக்கையை மேற்கோள்காட்டி சர்வதேச நாணய நிதியமும் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கை உட்பட 19 நாடுகளில் உணவு பாதுகாப்பற்ற நிலை காணப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# கஞ்சாக் கடத்தல் மையப் புள்ளியாக யாழ்ப்பாணம் மாறியது எப்படி?

**கட்டுரையாளர்:**
யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக
– பகிரதன் –

## இது நம்ம யாழ்ப்பாணம் -2

யாழ்ப்பாணத்தில் அனைத்து வகையான போதைப் பொருட்களும் தாராளமாக காணப்படுகின்றன. கஞ்சா மற்றும் கேரள கஞ்சா என்பன இந்தியாவிலிருந்தே பெருமளவுக்குக் கடத்தி வரப்படுகின்றன. அதேவேளையில், இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கான கஞ்சா விநியோகத்துக்கான மத்திய பகுதியாகவும் யாழ்ப்பாணமே இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் சொல்கின்றன. தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பாதை மிகவும் குறுகியது. இது கடத்தல்காரர்களுக்கு வசதியானதாகி விடுகின்றது. ஆனால், இந்த வடக்கு கடலில் உள்ள பாதுகாப்பு முகாம்களை இலகுவாக கடந்து அவர்கள் எவ்வாறு உள்ளே வருகின்றார்கள் என்பது தான் கேள்விக்குறி!

கஞ்சா தவிர்ந்த ஏனைய போதைப் பொருட்கள் தென்பகுதியிலிருந்தே வடபகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக ஹிரோயின், ஐஸ், மாவா போன்ற பல்வேறு போதைப் பொருட்கள் தென்பகுதியிலிருந்து தரை மார்க்கமாகவே யாழ்ப்பாணத்துக்கும், வடபகுதியின் ஏனைய மாவட்டங்களுக்கும் கொண்டு வரப்படுகின்றன. கஞ்சா கடத்துபவர்கள் பிடிபடும் அளவுக்கு ஏனைய போதைப் பொருட்களைக் கடத்துபவர்கள் பிடிபடுவதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டால் மட்டும் அவர்கள் அதிரடியாக சிலரை கைது செய்கின்றார்கள். இவ்வாறு தகவல் கிடைத்து செல்கின்ற போதிலும் போதைப்பொருள் விநியோகஸ்த்தர்கள் பெரும்பாலும் தப்பிச் சென்று விடுகின்றார்கள். அதேவேளையில், போதைப் பொருள் விற்பனைக்காக அவர்கள் வெவ்வேறு உபாயங்களை ஒவ்வொரு தடவையும் கையாள்வதால், அவர்களைப் பிடிப்பதும் பொலிஸாருக்கு சிரமமாகி விடுகின்றது. இதனை



விட, பொலிஸ் தரப்பினருடனும் அவர்கள் தொடா்புகளைப் பேணலாம் எனத் தெரிகின்றது.

### இரண்டு மடங்கு அதிகரித்த ஹிரோயின் பாவனையாளர்கள்

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்குக்கும் அதிகமாக வடக்கில் போதைப் பொருள் பாவனை உயர்வடைந்திருக்கிறது' என்கிறார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி.

இந்த நிலையில், ஹெரோயின் பாவனையினால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 10க்கும் மேற்பட்டோர்கடந்த மூன்று மாதங்களில் மரணமடைந்துள்ளனர் எனவும் டாக்டர் சத்தியமூர்த்தி கூறுகின்றார்.

ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக கடந்த ஜீன் மாதம் 54 பேர் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஜுலையில் 53 பேர், ஆகஸ்ட் மாதம் 93 பேர், செப்டம்பர் 112 பேர் என – சிகிச்சைக்காக வருவோரின் எண்ணிக்கை அச்சம் தரும் வகையில் அதிகரித்துள்ளது.

போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டனர். ஆனால், சிறைச்சாலைகளில் ஹிரோயின் இரகசியமாகக் கொண்டு செல்லப்படும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. இவ்வாறான சில முயற்சிகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. போதைப பழக்கத்தை தடுத்து நிறுத்துவதில் காணப்படும் சிரமங்களை இவை உறுதிப்படுத்துகின்றன.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸார் படையினர் பாடசாலை அதிபா்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் கண்காணிப்பையும் தாண்டி மிகவும் நுணுக்கமான முறையில் யாழ்ப்பாணத்தில் போதைப்பொருட்களின் விநியோகம் நடைபெறுகின்றது. பலர் கைதாகின்றார்கள், கைவிடப்பட்ட நிலையில் போதைப் பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. இருந்த போதிலும், போதைப் பொருள் விநியோகம் மட்டும் தடைப்படுவதில்லை. அந்தளவுக்கு நுணுக்கமாக இதற்கான வலையமைப்பு பின்னப்பட்டிருக்கின்றது.

### போதைப் பழக்கத்துக்கு அடிமை ஆவது எப்படி?

இந்த இளைஞா்கள் போதைப்பழக்கத்துக்கு எவ்வாறு அடிடையானார்கள் என்று யாழ் மருத்துவமனைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தியிடம் கேட்டபோது அவர் அதற்கு இவ்வாறு பதிலளித்தார்.

யுத்தத்தின் பின்னர் மக்களிடமிருந்த பதட்டம், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் அதிகரித்த பிரசன்னத்தினால் ஏற்படும் பயம், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பணம் போன்றவை – போதைப்பாவனை அதிகரிப்புக்கு காரணங்களாக இருக்கக் கூடும் என அவர் கூறுகின்றார்.

படிப்பு எனும் பெயரில் பெற்றோரின் கடுமையான அழுத்தங்களை எதிர்கொள்ளும் மாணவர்கள், சமூக நிறுவனங்களுடன் தொடர்பற்றுப் போகும் நபர்கள் மற்றும் பெற்றோருடனான நெருக்கத்தை இழக்கும் பிள்ளைகள் போதைப் பொருள் பாவனைக்கு இலகுவில் ஆளாகி விடுகின்றனர்'' என அவர் குறிப்பிட்டா்.

பாடசாலை மாணவர்களில் தொடங்கி, 30 வயது வரையிலானோரே ஹெரோயின் பாவனையில் அதிகளவில் ஈடுபடுகின்றனர். ஆரம்ப கட்டத்தில் போதையின் பத்துக்காகவும் – பின்னர் அடிமைப்பட்ட நிலையிலும் இவர்கள் ஹெரோயின் போதைப் பொருளைப் பாவிக்கின்றனர்' என அவர் விவரித்தார். அதாவது, அதிலிருந்து விடுபட முடியாதவவர்



களாக அவர்கள் மாறி விடுகின்றார்கள். அதன்பின்னர் அவர்கள் போதைப் பொருட்களைத் தேடிச் செல்லத் தொடங்கி விடுகின்றார்கள். இது தான் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை.

இவ்வாறு போதைக்கு அடிமையானவர்களால் மற்றொரு சமூகப்பிரச்சினையும் உருவாகின்றது. இவா்களால் போதை வஸ்த்துக்களைப் பயன்படுத்தாமல் இருக்க முடியாது என்பதால், அதற்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தமது வீடுகளிலேயே முதலில் திருட ஆரம்பிக்கின்றார்கள். பின்னர் அது விரிவடைகின்றது. இது பல்வேறு குற்றச்செயல்களுக்கும் காரணமாகி விடுகின்றது.

### வறுமையைப் பயன்படுத்தும் போதைவஸ்து வியாபாரிகள்

ஹிரோயின் போன்ற போதைப்பொருட்களை உடலில் செலுத்துவதற்காக பலரும் ஒரே ஊசியைப் பயன்படுத்துகின்றார்கள். இதனால் பல்வேறு தொற்று நோய்களுக்கும் அவர்கள் உள்ளாகின்றார்கள். இது மற்றொரு புதிய பிரச்சினைகளை உருவாக்குகின்றது. குறிப்பாக எச்ஐவி தொற்றுக்குள்ளானவர்கள் பயன்படுத்தும் ஊசியை மற்றவர்கள் பாவிக்கும் போது, அவர்களுக்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்படுகின்றது. வடக்கில் ஹெரோயின் பாவனை காரணமாக எச்ஐவி தொற்றும் அதிகரித்துச் செல்கிறது. இதுபோன்ற காரணங்களால்தான் கடந்த சில மாதங்களில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பத்து பேர் மரணித்துள்ளார்கள்.

வறுமையில் இருப்போரை இந்தத் தொழிலுக்குள் இலகுவில் போதைப் பொருள் கடத்தலில் வியாபாரிகள் பயன்படுத்துகின்றனர்' என்ற புதிய தகவல் ஒன்றை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அண்மையில் தெரிவித்தார்.

குருநகர் பகுதியில் 13 வயது பெண் பிள்ளை ஒருவரை – போதைப் பொருள் கடத்துவதற்கு பயன் படுத்திய விடயம் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டதாக தெரிவித்த அவர், 'குறித்த பிள்ளை பாடசாலைக்கு வராமையினை ஆராய்ந்த போதே இவ்விடயம் அம்பலமாகியது' என்றார்.

ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரிகள் மிகவும் நுட்பமானதொரு வலையமைப்பைக் கொண்டிருப்பதாக இதன் போது குறிப்பிட்ட அவர், கூலித் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்ட பகுதிகளிலேயே போதைப் பொருள் பாவனை அதிகமாக உள்ளது என சுட்டிக் காட்டினார்.

இதனைவிட வறுமையில் வாழும் கடற்றொழிலாளா்களும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விநியோகத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றார்கள். இதனையும் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் மிகவும் நுட்பமாகப் பயன் படுத்துகின்றார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றிய கடற்பரப்பின் அளவு 273 கடல் மைல்களாகும். இதனை பாதுகாக்கும் பெயரில் 93 முகாம்கள் அல்லது காவல் நிலையங்களில் கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இதனை விட, தரையில் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட இராணுவமும், புலனாய்வாளர்களும் போதுமான அளவில் உள்ளனர். இந்த நிலையிலும் யாழ்ப்பாணத்தைப் போதைப் பொருட்கள் எவ்வாறு ஆக்கிரமிக்கின்றன?

இந்தியாவின் தென ்பகுதியிலிருந்தே – குறிப்பாக தமிழ்நாடு, கேரளா பகுதிகளிலிருந்தே இலங்கையின் வடகடற் பரப்புக்குள் போதைப் பொருட்கள் பெருமளவில் கொண்டு வரப்படுகின்றன. இவற்றில் இந்திய, இலங்கை கடற் படையினரிடத்தில் சிக்குபவை போக எஞ்சியவை குடாநாடு உள்ளிட்ட வட பகுதிக்குள் கொண்டு வரப்படுகின்றது. இவற்றில் ஒரு தொகுதி நாடாளவிய விநியோகத்திற்காக பகிரப்படுவதோடு எஞ்சியவை, வட கடற்பரப்பிலிருந்து வேறு சில நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தகவல்கள் உள்ளன. இவ்வாறு தான் யாழ்ப்பாணம் இப்போது போதைப்பொருள் விநியோகத்துக்கான மையமாக மாற்றமடைந்திருக்கின்றது.

போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறான புனர்வாழ்வு மையங்கள் உள்ளன. அவற்றின் நிலை என்ன என்பனபோன்ற தகவல்களுடன் அடுத்த வாரம் சந்திப்போம்.



# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 ஒக்டோபர் 2022 முதல் 07 ஒக்டோபர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி சந்திராவதி யோகரெத்தினம்

மிமோறியல் லேன் மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி சந்திராவதி யோகரெத்தினம் அவர்களது 31ம்நாள் (அந்தியேட்டி) நினைவு நாள் 07 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சந்திராவதி யோகரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வைத்திலிங்கம் வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வைத்திலிங்கம் வைத்தியநாதன் அவர்களது 25வது ஆண்டு நினைவு நாள் 07 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. அமரர் திரு வைத்திலிங்கம் வைத்தியநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 100வது பிறந்தநாள் நினைவாக



### திருமதி குமரேசு நீலாயதாட்சி

யாழ்.வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த அமரத்துவமாது திருமதி குமரேசு நீலாயதாட்சி அவர்களது 100வது பிறந்த நாள் 15 செப்டம்பர் 2022 ஆகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக 26 செப்டம்பர் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரத்துவமாது திருமதி குமரேசு நீலாயதாட்சி அவர்களது 100வது பிறந்த நாள் அன்று அவரை நினைவு கூரும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 02 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மநாதன் கனகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் எட்டாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக்குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமியின் பரதநாட்டிய அரங்கேற்றமாகும். அன்றையதினம் செல்வி அபிராமி அனபு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



02 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோகாந்தன் சாருமதி தம்பதிகளின் செல்வப்புதல்வி சுபீக்காவின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சுபீக்கா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



02 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரகுநாதர் மயில்வாகனம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 ஒக்டோபர் 2022 புதன்கிழமை யாழ்.பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வத்சலா கண்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி வத்சலா கண்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



07 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை மிமோறியல் லேன் மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி சந்திராவதி யோகரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



07 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வைத்திலிங்கம் வைத்தியநாதன் அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## பிறந்த நாள் வாழ்த்து



### திருமதி வத்சலா கண்ணன்

கனடாவில் வசிக்கும் திருமதி வத்சலா கண்ணன் அவர்கள் தனது பிறந்த நன் நாளை 06 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை தமது இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடினார். அன்றைய நாளில் திருமதி வத்சலா கண்ணனும் அவரது கணவர், பிள்ளைகள் வினோக்கா, தீபிகா ஆகியோரும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். பிறந்த நாள் காணும் திருமதி வத்சலா கண்ணன் அவர்கள் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## வெகு சிறப்பாக நடைபெற்ற சதங்கை நர்த்தகி ஜெனனி குமாரின் மாணவி செல்வி அபிராமி பாலச்சந்திரனின் அரங்கேற்றம்









கடந்த சனிக்கிழமை 01 ஒக்டோபர் 2022 மாலை 6.00 மணிக்கு **6315 Meadowvale Rd** மிஸிசாகாவில் அமைந்துள்ள **Meadowvale Theatre** இல் சிலம்பொலி சேத்திரா நடனப்பள்ளி அதிபரும் சதங்கை நர்த்தகியுமான ஸ்ரீமதி ஜெனனி குமார் அவர்களின் மாணவியும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வியுமான அபிராமி பாலச்சந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் அரங்கு நிறைந்த கலா ரசிகர்களோடு வெகுசிறப்பாக நடைபெற்றது. சிறந்த – தேர்ச்சி பெற்ற பரத நாட்டியக் கலைஞருக்கு உரிய சிறப்பு அம்சங்களுடன் செல்வி அபிராமியின் ஆடல் அழகும் அபிநயமும் சபையோரின் பலத்த பாராட்டைப் பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது. செல்வி அபிராமி பரதக் கலையில் மட்டுமல்ல தனது படிப்பிலும் சிறந்த மாணவியாவார். அவர் மென்மேலும் வளர்ந்து பார்போற்றும் பைந்தமிழ் மகளாக வளர எமது வாழ்த்துக்கள்! வாழ்க வளமுடன்! நன்றி போட்டோ – (நினைவுகள்) **Ninaivukal** கணா அண்ணா

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல்
2% வட்டி (per month)
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
S. Christeen
416-258-6759

Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
திருமதி நவநாதன் துஷி
உங்கள் அபிமான ஈழநாடு பத்திர

# இன்னிசை மாலையும் இரா

அரவிந்தனின்

Mega Tuners

இசையில்
சுப்பர் சிங்கர் புகழ் புண்யா,
ஹரிகரசுதன்
மற்றும் கனேடிய தமிழ்ப் பாடகர்கள்
இணைந்து வழங்கும்

ஹரி

இன்

OCTOBER
23 2022
SUN @ 6:00PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST, SCARBOR
(FINCH & KENNEDY)

தொடர்பு
ஈழநாடு பரமேஸ்
தயவு செய்து நுழைவுச்சீட்டு
நிகழ்வுகள் சரியாக மாலை 6
தங்கள் ஆதரவ

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX Excel Realty Ltd., Brokerage

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan
Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
RBC Royal Bank Desjardins Manulife Foresters

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

Tekon
Banquet services & Catering
Neela Nadarajan
Event planner
Wedding Reception Engagements
Birthday Parties Puberty Ceremony
Bharathanatya Arangetram Any other Occasions
416.844.3018
416.995.2059

JESEETHA JEGANATHAN
Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
www.jeseehomes.com
Century 21
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN, BA
Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
JEYSURESH JEGANATHAN
Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கு...

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159


வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

பந்தி நினைவரங்கத்தில்

ிகை 10வது ஆண்டாக நடாத்தும்



# ப்போசன விருந்தும் 2022

சுப்பர் சிங்கர் புகழ்
**புண்யா**



ிரைப்பட பாடகர்
ிஹரசுதன்



# னிசை மாலை

அன்பளிப்பு:
ROUGH VVIP: $200, VIP: $100

https://eelanadu.ca/dinner-and-music/

களுக்கு:
- 416.841.9600
டன் மண்டபத்திற்கு வரவும்.
:00 மணிக்கு ஆரம்பமாகும்.
ுக்கு நன்றிகள்


TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஈசன் கிருஷ்ணா
905-886-7399
SunLife Insurance

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
•Life Insurance
•Critical Illness •RESP
•Disability •RRSP
•Mortgage Protection Insurance
•Travel Insurance
Foresters · Industrial Alliance · Assumption Life

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell: 416-917-7263
Accountant since 1993

WEXFORD
WELLNESS CARE INC
✓ MASSAGE THERAPY
✓ PHYSIOTHERAPY
✓ ORTHOPAEDIC
✓ ACUPUNCTURE
✓ CHIROPRACTIC
✓ ORTHOTICS
301-240 Alton Towers Circle,
Toronto ON M1V 3Z3
647-349-5120
647-349-5121
wexfordclinic@gmail.com

மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம்
சுப்பர்மார்கெட்
இலங்கை, இந்திய மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough,
ON M1X 0C8
416 292 8585

KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

Proudly Canadian Since 1985
Jyothi
அன்றும் இன்றும் என்றும்..
Experience the Taste
ஜோதி தயாரிப்புக்களை கேட்டு வாங்குங்கள்
416.477.5345
www.jyothifoods.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

தேசியம்
வழங்கும்
# பெருமையம்
'எண்ணம் இடும் மேடை'



நினைவுப் பகிர்வு
தேசத்தின் ஓவியம்



இசை
செழியன் அரங்கில்
மழைபெய்த நாளொன்றில்...



நாடகம்
மௌனத்தின் மொழிபெயர்ப்பு
ஆக்கம்
சக்கரவர்த்தி
இயக்கம்

ஒக்டோபர் 16, 2022 | ஞாயிறு பி.ப.6:30 | Fairview Library Theater | 416.951.2681

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கைவிருப்பில்!
10,000+



இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 28 வயது வேலைசார். Bachelors degree, development advisor மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 29வயது வேலைசார். ஆணைவழு degree, Product designer மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 30 வயது வேலைசார். Bachelors degree, Assistant to council மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 61 வயது catholic mixed வேலைசார். high school, மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

- 647 709 1536
416 477 6854
416 477 2259

Mon to Fri
10AM to 7PM
Sat
1PM to 7PM

- GTA Square- 5215
Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
www.friendsmatrimony.com

# பாடசாலைகளில் போதைப் பொருள்! யாருடைய தவறு?

தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் மிகக்குறிப்பாக பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் அண்மைக்கால புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.



இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும் கருத்துக்களை கூர்ந்து கவனித்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. என்னவெனில், பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்க முடியாதிருப்பதன் விளைவு தான் இது போன்ற சீரழிவுகள் என்ற தொனிப்பட பலரும் கருத்து தெரிவிக்கிறார்கள். கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள், சட்டவாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உட்பட பலதரப்பட்டவர்கள் அவ்வாறான கருத்துக்களைக் கொண்டிருப்பதாகத தெரிகிறது. ஆசிரியரின் கையில் இருந்த பிரம்பு பறிக்கப்பட்டதால் தான் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் பாடசாலை மட்டத்துக்கு பரவியுள்ளன என்று ஒரு பகுதியினர் நம்புகிறார்கள்.

கல்வியதிகாரிகளுக்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் வகுப்பெடுக்கும் உயரதிகாரிகள் மாணவர்களை தண்டிக்கக்கூடாது என்று கூறிவிட்டு இப்பொழுது போதைப் பொருள் பாவனை தொடர்பான புள்ளி விபரங்களை ஒப்புவிக்கிறார்கள் என்று வேறொரு குறிப்பு கூறுகிறது. இக் கருத்துக்கள் எல்லாமே தொகுப்பாக கூற வருவது ஒரு விடயத்தைத் தான். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கடுமையாகத் தண்டித்தால் இது போன்ற விடயங்களை கட்டுப்படுத்தலாம் என்பது தான்.

பாடசாலைகளில் மாணவர்கள் மீது உடல் ரீதியாக அல்லது உளரீதியாக வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தும் 17ஆம் இலக்க சுற்று நிருபம் 2005ஆம் ஆண்டு கல்வியமைச்சால் வெளியிடப்பட்டது. அப்பொழுது கல்வியமைச்சின் செயலாளராக கலாநிதி. தாரா டி மெல் இருந்தார். அதே ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 23ஆம் இலக்கச் சட்டத்தின்படி நீதிமன்றங்களில் சரீரத் தண்டனைகள் நிறுத்தப்பட்டதன் விளைவே மேற்படி சுற்றுநிருபம் என்று கூறப்படுகிறது.

மேற்படி சுற்றுநிருபமானது 2016ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 12ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் மீள வலியுறுத்தப்படுகிறது. இச் சுற்றுநிருபமானது ஆசிரியர்களின் கைகளைக் கட்டிப் போடுகிறது என்ற ஒரு விமர்சனம் ஆசிரியர் சமூகத்தின் மத்தியிலும் ஏன் பெற்றோர் மத்தியிலும் கூட உண்டு. கண்டிப்பான ஆசிரியரே நல்லாசிரியர் என்று அபிப்பிராயம் தமிழ்மக்கள் மத்தியில் ஆழமாக பதிந்திருக்கிறது. கண்டிப்பான ஆசிரியர்களே வெற்றி பெற்ற ஆசிரியர்களாகவும் பார்க்கப்படுகிறார்கள். நாட்டில் உள்ள கல்வி முறையானது பரீட்சையை மையமாகக் கொண்டது.

பரீட்சை மையக் கல்வியைப் பொறுத்தவரை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுப்பவரே கெட்டிக்கார ஆசிரியர். அந்த சிறந்த பெறுபேறுகளை அவர் எப்படியும் பெற்றுக் கொடுக்கலாம் என்று பெரும்பாலான பெற்றோர் கருதுகிறார்கள். இதனால் சிறந்த கல்விப் பெறுபேறுகளுக்காக அதிகம் பலியிடப்படுவது மனித உரிமைகள் என்பதனை பெரும்பாலான பெற்றோர் பொருட்படுத்துவதில்லை. அதனால் தேசியமட்ட பரீட்சைகளை நோக்கி மாணவர்களை தயார்படுத்தும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்றன.

இப்படிப்பட்டதோர் கல்விச்சூழலில் தண்டனை நிறுத்தப்பட்டதால் பிள்ளைகள் மத்தியில் போதைப்பொருள் அதிகரிக்கிறது என்ற கூற்று மேலோட்டமாகப் பார்த்தால் சரியாகவே தோன்றும். சில நாட்களுக்கு முன் ஆந்திராவில் கஞ்சா பாவிக்கும் தனது 15 வயது மகனை அவருடைய தாயார் வீட்டில் ஒரு கம்பத்தில் கட்டிவைத்து அவருடைய கண்களுக்குள் மிளகாய்த்தூளைத் தூவினார். இது ஊடகங்களில் பரவலாக வெளி வந்தது. இது போன்ற தண்டனைகள் மூலம் தான் மாணவர்களை மட்டுமல்ல பாடசாலை நீங்கிய இளையவர்களையும், ஏன் ஒட்டுமொத்த சமூகத்தையும் கட்டுப்படுத்தலாம் என்ற ஒரு கருத்து பரவலாக உண்டு.

ஆனால் தனிய தண்டனைகளால் மட்டும் இந்த விவகாரத்தை கையாள முடியாது. ஏனெனில் பிரச்சினையின் வேர்கள் மிக ஆழமானவை. அந்த வேர்களைத் தேடிப் போனால் யாரைத் தண்டிப்பது என்ற கேள்வி எழும். நுகர்வோரை தண்டிப்பதா? அல்லது விற்பனையாளர்களை தண்டிப்பதா? அல்லது திட்டமிட்டு மாணவர்களைக் குறிவைத்து போதைப் பொருள் வலைப்பின்னலைக் கட்டியெழுப்பும் அரசியல் உள்நோக்கமுடைய சக்திகளைத் தண்டிப்பதா? யாரை தண்டிப்பது?

இப்பிரச்சினையின் சமூகப் பொருளாதார, அரசியல் பின்னணி மிகஆழமானது. 2009க்குப் பின்னரான தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை, முதலாவதாக தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று நிலவுகிறது.

இரண்டாவதாக உலகில் அதிகம் படைமயமாக்கப்பட்ட ஒரு அரசியல் ராணுவ சூழலுக்குள் தமிழ்ச் சமூகம் வாழ்கிறது. நாட்டின் படைக் கட்டமைப்பின் மொத்த தொகையில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு கிழக்கில் காணப்படுவதாக ஒரு புள்ளிவிபரம் உண்டு.

மூன்றாவதாக மேற்சொன்ன இராணுவ மயப்பட்ட சூழல் காரணமாக படைத்துறை புலனாய்வாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் தமிழ்ச்சமூகம் காணப்படுவது.

நாலாவதாக ஆயுத மோதல்களுக்கு முன்னிருந்த ஒரு சமூகக் கட்டமைப்பு குலைந்து போய் விட்டது. ஆயுதப் போராட்டம் புதிய விழுமியங்களையும் ஒரு புதிய சமூக ஒழுங்கையும் உருவாக்க முற்பட்டது.2009ல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில், ஏற்கனவே இருந்த சமூகக் கட்டமைப்பும் குலைந்து இடையில் ஆயுதப் போராட்டம் கொண்டு வந்த புதிய ஒழுங்கும் குலைந்து இப்பொழுது ஏறக்குறைய எல்லாச் சமூகக் கட்டமைப்புகளும் குலைந்து போன ஒரு நிலை காணப்படுகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் விழுமியங்களை மீளுருவாக்க வேண்டிய ஒரு சமூகமாக தமிழ்ச் சமூகம் மாறியிருக்கிறது.


ஐந்தாவது உலகளாவிய தகவல் தொழில் நுட்பப் பெருக்கத்தின் விளைவாக இளைய தலைமுறை கைபேசி செயலிகளின் கைதியாக மாறியிருப்பது.

மேற்கண்ட ஐந்து காரணங்களையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும்.தமிழ்மக்களைத் தொடர்ந்தும் அரசியல்ரீதியாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதாகவும் போதைப்பொருள் வலைப்பின்னலை அவர்களே நிர்வகிப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் ஏன் முன்வைத்து வருகிறார்கள் என்ற கேள்விக்கும் விடை கிடைக்கும்

எனவே போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது என்பது தனிய தண்டனைகளால் மட்டும் சாத்தியமான ஒன்று அல்ல.அது ஒரு கூட்டுச் செயற்பாடாக அமைய வேண்டும்.

முதலாவதாக, சமூகப் பிரதிநிதிகள்,மக்கள் பிரதிநிதிகள், மருத்துவர்கள் செயற்பாட்டாளர்கள், மதப் பெரியோர்கள், புத்திஜீவிகள்,கலைஞர்கள், ஊடகங்கள் என்று எல்லா தரப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுச் செயற்பாடாக அதை முன்னெடுக்க வேண்டும். அதற்கு மக்கள் பிரதிநிதிகள் அல்லது செயற்பாட்டாளர்கள் தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தில் தான் போதைப் பொருள் பாவனை பாடசாலைகள் வரை வந்துவிட்டது.போதைபொருள் பாவனை மட்டுமல்ல வாள் வெட்டுக் கலாச்சாரத்தின் பின்னால் உள்ள உளவியலைத் தீர்மானிக்கும் அம்சங்களும் மேற்கண்டவை தான்.

இளம் வயதினரின் வேகங்களுக்கு ஈடு கொடுத்து, அவர்கள் மத்தியில் இலட்சியங்களை விதைத்து, அவர்களுடைய சாகச உணர்வுகளைச் சரியான திசையில்


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

திருப்பி, விழுமியங்களை மீளுருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மதகுருகளுக்கும் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் உண்டு. ஆனால் அக் கூட்டுப் பொறுப்பை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்?

பாடசாலைகளில் தண்டனை நீக்கப்பட்டதை குறித்து முறையிடுகிறோம். ஆனால் ஒரு காலம் எமது பிள்ளைகள் தனியாக பள்ளிக்கூடங்களுக்கு போனார்கள். டியூட்டரிகளுக்கு போனார்கள். பெற்றோர் அவர்களை காவிச் செல்லும் ஒரு நிலைமை இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது எல்லா அம்மாக்களும் மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளை பூனை குட்டியைக் காவுவது போல இரவும் பகலும் காவுகிறார்கள். ஏன் காவுகிறார்கள்? பிள்ளைகளை என் தனியாக விட முடிவதில்லை?

ஒரு பாடத்துக்கு இரண்டுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் பிள்ளை படிக்கிறது. அவ்வாறு படிப்பதற்கே நாள் போதாது. இது சுயகற்றலை பாதிக்காதா? அப்படிப் படித்து மேலெழுந்த பிள்ளை என்னவாய் வருகிறது? கல்வி பற்றிய தமிழ்ச் சமூகத்தின் அளவுகோல்கள் சரியானவைகளா? இந்த கல்விமுறைக்கூடாக உருவாக்கப்பட்ட ஆளுமைகள் எப்படிப்பட்டவை? இதைக் குறித்த ஒரு சரியான மீளாய்வு தமிழ்ச் சமூகத்திடம் உண்டா? இல்லை.

கல்வி தொடர்பாகவும் விழுமியங்களை மீளுருவாக்குவது தொடர்பாகவும், சமூகத்தை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாகவும் கூட்டுத்திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அவற்றை வகுப்பதற்கான அதிகாரம் இல்லை என்று சொல்லிக் கொண்டு 13 ஆண்டுகளை கடந்து வந்து விட்டோம். நாங்களாக சுயகவசங்களை உருவாக்க தவறிவிட்டோம்.அ ந்த வெற்றிடத்தில் தான் போதைப்பொருளும் வாள்களும் நுளைகின்றன.

எனவே பிரச்சனையின் வேர்களைத் தேடிப் போனால் முழுச்சமூகமும் அதன் கூட்டுப் பொறுப்பை இழந்து விட்டதைக் காணலாம். அண்மையில் எரிபொருள் வரிசைகளில் நின்ற போது நாங்கள் ஒரு சமூகமாகத் தோல்வியடைந்தமை தெரியவில்லையா? உங்களுக்கும் பிள்ளைக்கும் உங்களுக்கும் இடையே ஒரு வெளியாள் போதைப்பொருளை.வாளைக் கொடுக்கிறான் என்றால் உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையே எங்கேயோ ஒரு இடைவெளி இருக்கிறது என்று பொருள்.

உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையே எங்கேயோ தொடர்பாடல் அறுந்து விட்டது என்று பொருள். நீங்கள் பிள்ளையோடு மேலும் கூடுதலாக நேரத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று பொருள்.பிள்ளைகளை இரவு பகலாக வகுப்புகளுக்கு காவி செல்கிறீர்கள். ஆனால் பிள்ளைகளோடு மனம் விட்டு கதைக்கின்றீர்களா? பூனை குட்டியைக் காவுவது போல பிள்ளைகளை காவுகிறோம். சிறந்த கல்விப் பெறுபேறுக்காக மனித உரிமைகளைப் பலிகொடுக்கத் தயாராக இருக்கிறோம். அந்தக்கல்விப் பெறுபேறுகளின் விளைவாக நாங்கள் உருவாக்கிய ஆளுமைகள் எத்தகையவை என்ற கேள்வியை எப்பொழுதாவது எங்களை(22ம் பக்கம் பார்க்க)

# ஜெனிவாவில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் 19 அம்சத் தீர்மானம்

**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து ஈழநாட்டிற்காக**
**- பார்த்தீபன் -**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கை தொடர்பான முக்கிய குழு, இலங்கை தொடர்பில் 19 அம்ச தீர்மானத்தை முன் வைத்துள்ளது. இதற்கு முப்பது நாடுகள் அனுசரணை



வழங்கியிருப்பதால் இது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ் விடயத்தில் இலங்கைக்கு ஆதரவாக ஆறு நாடுகள் மட்டுமே உள்ளன. இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் இந்தப் பிரேரணை விடயத்தில் நடுநிலை வகிக்கப்போகின்றன.

இந்த வரைவுத் தீர்மானம் ஐக்கிய இராச்சியத்தின் தலைமையில் அமெரிக்கா, வட அயர்லாந்து, மொண்டினீக்ரோ, வடக்கு மெசிடோனியா, அல்பேனியா, அவுஸ்திரேலியா, ஒஸ்திரியா, பெல்ஜியம், பொஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, பல்கேரியா, கனடா, குரோஷியா, சைப்ரஸ், செக்கியா, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, ஜெர்மனி, கிரீஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லத்துவியா, லிச்சென்ஸ்டீன், லிதுவேனியா, லக்சம்பர்க், மலாவி, மொல்டாவா, நெதர்லாந்து, நியூ சிலாந்து, நோர்வே, போர்த்துக்கல், ருமேனியா, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா, ஸ்வீடன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அனுசரணையை பெற்றுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் செயற்பாடுகளை பாராட்டி இந்த வரைவு தீர்மானம், 19 விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் சமர்ப்பித்த வாய்மொழிப் புதுப்பிப்பு மற்றும் அதன் தற்போதைய அமர்வில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கை ஆகியவற்றை வரவேற்கிறது.

2.உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு நடைமுறைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாட்டை வரவேற்கிறது, அத்தகைய ஈடுபாடு மற்றும் உரையாடலைத் தொடர ஊக்குவிப்பதுடன், இலங்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறது.

3. உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருளில் கடுமையான தட்டுப்பாடு, அத்தியாவசிய மருந்துப் பற்றாக்குறை மற்றும் வீட்டு வருமானம் குறைப்பு போன்றவற்றின் விளைவாக பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் தாக்கம் பற்றிய கவலையை வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில் தினசரி ஊதியம் பெறுபவர்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் விசேட தேவை உடைய நபர்கள் உட்பட, மிகவும் பின்தங்கியவர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

4. 2022, ஏப்ரலில் இருந்து மனித உரிமைகள் முன்னேற்றங்கள், அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் கைதுகள், அத்துடன் அரசாங்க ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறை, இதன் விளைவாக மரணங்கள், காயங்கள், அழிவு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு சேதம் விளைவித்தல், மற்றும் அனைத்து தாக்குதல்களிலும் சுயாதீன விசாரணைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், பொறுப்பானவர்கள் கருத்திற் கொள்ள வேண்டும் என்று கோருகிறது.

5. சிவில் அரசாங்க செயல்பாடுகளை இராணுவ மயமாக்கலில் இருந்து பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான நீதித்துறை மற்றும் முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை நிவர்த்தி செய்வது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் குறைகள், கோரிக்கைகள் நீடித்த உள் இடப்பெயர்ச்சி, நில தகராறுகள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மற்றும் நினைவேந்தல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்படும், கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் மற்றும் பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கு ஊக்கமளிக்கிறது.

6.தமிழீழ விடுதலைப் புலிகளின் துஷ்பிரயோகங்கள் உட்பட அனைத்து தரப்பினராலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

7. சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான உள்நாட்டுப் பொறிமுறைகளின் தொடர்ச்சியான தவிர்ப்பை அறிக்கை குறிப்பிடுகிறது, மேலும் மனித உரிமைகளின் பாரதூரமான மீறல்களுக்கான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

8. பொறுப்புக் கூறலை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள், துஸ்பிரயோகங்கள் தொடர்புடைய குற்றங்களின் ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் கடுமையான மீறல்களுக்கு உறுப்பு நாடுகளில், தகுதியான அதிகார வரம்புடன் ஒருங்கிணைக்கும் திறனை விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் உயர்ஸ்தானிகர் முடிவு செய்துள்ளார்.

9.அனைத்து சமூகங்கள் மற்றும் தலைமுறைகளை உள்ளடக்கிய இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டவர்களுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பை அறிக்கை வலியுறுத்துகிறது. மேலும் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களின் பங்குதாரர்களுடன் பரந்த அடிப்படையிலான ஆலோசனைச் செயல்பாட்டில் மேலும் ஈடுபடவும், அதற்கான தீர்வுகளை வழங்கவும் அர்த்தமுள்ள நல்லிணக்கம், அரசியல் அதிகாரப் பகிர்வு, மேம்பட்ட மனித உரிமைகள் மற்றும் நிலையான சமாதானத்தையும் தேட இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது.

10. அனைத்து மத சமூகங்களும் தங்கள் மதத்தை வெளிப்படுத்தும் திறனை ஊக்குவிப்பதன் மூலம் மத சுதந்திரம் அல்லது நம்பிக்கை மற்றும் பன்மைத்துவத்தை வளர்க்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது, மேலும் சமூகங்கள் மத்தியில் வெளிப்படையாகவும் சமமான நிலையிலும் பங்களிப்பை கோருகிறது.

11.முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஓரங்கட்டப்படுதல் மற்றும் அவர்களுக்கு எதிரான பாகுபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை தீர்மானம் வலியுறுத்துகிறது.

12. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச் செயல்களுக்கும், உடனடி, முழுமையான மற்றும் பக்கச் சார்பற்ற விசாரணையை பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழு பங்கேற்புடன் உறுதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு இந்த தீர்மானம் அழைப்பு விடுக்கிறது.

13. பொது மற்றும் முன்னாள் அரச அதிகாரிகள் செய்த ஊழல்கள் உட்பட, ஊழல்களை விசாரிப்பது மற்றும் உத்தரவாதமளிக்கும் இடத்தில், வழக்குத் தொடுப்பது உட்பட, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

14.காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயல்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அதேவேளையில், பலவந்தமாக காணாமல் ஆக்ககப்பட்டோர் தொடர்பான பல வழக்குகளைத் தீர்ப்பது உட்பட, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களால் எதிர்பார்க்கப்படும் உறுதியான முடிவுகள் இன்னும் எட்டப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அவர்களின் தலைவிதி மற்றும் இருப்பிடம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயற்பாட்டின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும். இந்த செயற்பாட்டை தீர்மானம் வலியுறுத்துகிறது.

15. மனித உரிமை பாதுகாவலர்கள் உட்பட சிவில் சமூக செயற்பாட்டாளர்களைப் பாதுகாக்க, அவர்களுக்கு எந்தவொரு தாக்குதல்களையும் விசாரிக்கவும், சிவில் சமூகம் தடைகள், கண்காணிப்பு, பாதுகாப்பின்மை மற்றும் பழிவாங்கும் அச்சுறுத்தல் இல்லாமல் செயல்படக்கூடிய பாதுகாப்பான மற்றும் செயல்படுத்தும் சூழலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அது அழைப்பு விடுக்கிறது.

16. கடந்த 2022, மாரச்சில் இருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுப்புக்காவல்கள் தொடர்கின்றன, மேலும் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தை தீர்மானம் வலியுறுத்துகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் புதிய சட்டம் சர்வதேச நியமங்களுககு ஏற்ப முழுமையாக இணங்குவதை உறுதி செய்யவேண்டும் என்று தீர்மானம் பரிந்துரைத்துள்ளது.

17. மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பாராட்டுவதுடன், அவர்களிடமிருந்து நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கு முறையாகப் பதிலளிப்பது உட்பட, அந்த ஒத்துழைப்பைத் தொடர அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது.

18.இதுவரை குறிப்பிடப்பட்ட நடவடிக் கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து இணக்கத்துடன் வழங்குவதற்கு தொடர்புடைய சிறப்பு நடைமுறை ஆணை வைத்திருப்பவர்களை உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஊக்குவிக்கிறது.

19. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலில் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடுவதை மேம்படுத்துமாறு உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை தீர்மானம் கோருகிறது.

மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது மற்றும் 55 ஆவது அமர்வுகளில் ஒரு வாய்வழி புதுப்பிப்பு மற்றும் அதன் 54 ஆவது அமர்வில் எழுத்துப்பூர்வ புதுப்பிப்பு மற்றும் அதன் 57 ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கை மற்றும் ஊடாடும் உரையாடலையும், முக்கிய நாடுகளின் தீர்மானம் கோரியுள்ளது.

# வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு!

வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இது மிகக் கவலையளிக்கும் நிலையாகும். பாடசாலை மாணவர்களும் பகிரங்கமாகப் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு பாடசாலைகளின் பங்களிப்புப் போதாது. தங்களுடைய மாணவர்கள் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிந்து கொண்டே பல பாடசாலைகள் அவற்றை மறைக்க முற்படுகின்றன. தங்கள் பாடசாலையின் பெயர் கெட்டு விடும் என்ற தவறான (மூடத்தனமான) கற்பிதமே இதற்குக் காரணம். தங்கள் மாணவர்கள் பாதிக்கப்படைந்து கெட்டுப் போவதைப் பற்றிச் சிந்திக்காமல், கவலைப்படாமல் தங்கள் பாடசாலைகளின் பெயர் கெட்டு விடும் என்று சிந்திப்பது எவ்வளவு முட்டாள்தனமானது? உண்மையில் இது கொலைக்கு நிகரான செயற்பாடாகும் என்று தெரிவித்திருக்கிறார் யாழ் போதனா மருத்துவமனையின் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையினால் பெருமளவு இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் ஊசி மூலம் போதைப் பொருளை பயன்படுத்திய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். அண்மையில் இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூன்று பேர் சிகிச்சை பயனற்று உயிரிழந்து விட்டனர். ஒருவர் மருத்துவர்களின் மிகுந்த முயற்சியின் பின்னர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

ஊசி மூலம் போதைப் பொருளை உட்செலுத்தியவர்களின் இதயமும் நுரையீரலும் கிருமித் தொற்றுக்குள்ளாகிறது. இப்படியானவர்களைக் குணப்படுத்துவதற்கு லட்சக்கணக்காகச் செலவு ஏற்படுகிறது. குடும்பத்தினரும் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகின்றனர். கடந்த ஆண்டு 10 பெண்களும் 491 ஆண்களும் போதைப் பொருள் பாவனைக்குட்பட்டவர்களாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு 13 பெண்களும் 854 ஆண்களுமாக இந்த எண்ணிக்கை கூடியுள்ளது. பத்துப் பேர் மரணமடைந்துள்ளனர். இது ஒரு சமூகத் தொற்றுப் போல இளைய தலைமுறையினரை மோசமாகப் பாதிக்கிறது. ஆகவே இதைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். முக்கியமாக இதைப்பற்றிய விழிப்புணர்வு அவசியம்....என்று கேட்டிருக்கிறார் யாழ் போதான மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி.

இதேவேளை, பிரபலமான பாடசாலை ஒன்றில் மூன்று மாணவர்கள் போதைப் பொருளைப் பாவித்தமையினால் மயக்கமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னொரு பாடசாலையில் போதைப் பொருட்களுடன் சில மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவை வெளியே தெரியவந்த சேதிகள், தகவல்கள். இதை விட வெளியே தெரியவராத நிலையில் பல பிரச்சினைகள் உள்ளன. ஆனால், இன்று போதைப் பொருள் பாவனையில் தமிழ் இளையோர் சமூகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று எல்லோருக்குமே தெரியும். அப்படித் தெரிந்திருந்தாலும் எவரும் இதைக்குறித்து சீரியஸாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையைக் குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்திருக்கும் கருத்துகள் முக்கியமானவையாகும். போதைப் பொருள் பாவனை அதிகரித்துச் செல்கிறது என்றால் அதற்கு எம்முடைய சமூகம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றே அர்த்தமாகும். சமூக வீழ்ச்சிக்குப் பிரதான காரணம், சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாமையே. சரியான அரசியற் தலைமைத்துவத்தின் வழிகாட்டல் இல்லாத சமூகங்களின் நிலைமை எப்போதும் இப்படித்தானிருக்கும்.

இன்று எமது சூழலில் அதிகரித்திருக்கும் இயற்கை வளத்தைச் சிதைக்கும் சட்ட விரோத மணல் அகழ்வு, காடழிப்பு மற்றும் சமூகத்தைப் பாதிப்புக்குட்படுத்தும் மது உற்பத்தி (கசிப்புக் காய்ச்சுதல்) போன்றவற்றில் ஈடுபடுவோரில் அதிகமானோர் இள வயதினராகவே உள்ளனர். இவர்களில் பலரும் சில அரசியற் கட்சிகளின் ஆட்களாக உள்ளனர். இப்படியிருக்கும் போது இவர்களால் எப்படி இவற்றைக் கட்டுப்படுத்த முடியும்? மக்களுக்குச் சரியான வழி



காட்டலைச் செய்ய முடியும்? இன்று போதைப் பொருள் பாவனையும் விற்பனையும் அதிகரித்துள்ளது என்று மருத்துவத்துறையினர் கவலை தெரிவிக்கின்றனர். போதைப் பொருளைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்டுள்ளோருடைய மருத்துவத்தை கவனிப்பதால் இந்தப் பாதிப்புப் பற்றி அதிகமாக அறிந்தவர்களாக அவர்களே இருக்கின்றனர். அதேவேளை இது கட்டுப்படுத்தப்படாது விட்டால் சமூகத்தை அளித்து விடும் என்று எச்சரிக்கின்றனர். ஆனால், இதைக்குறித்து ஊடகங்கள் பெரிய அளவில் கவனம் செலுத்தவில்லை. சமூக மட்ட அமைப்புகள், அரசியற் தலைமைகள் எல்லாம் பாராமுகமாகவே உள்ளன. அல்லது இது அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி. புலனாய்வுத் துறையின் கைவரிசை என்று சாதாரணமாகச் சொல்லி விட்டுப் போய் விடுகிறார்கள். எப்படியிருந்தாலும் பாதிக்கப்படுவது எமது பிள்ளைகள் என்பதால் இதைக் கட்டுப்படுத்துவதைப் பற்றியே நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

பொலிஸ் மற்றும் சட்டத் தரப்புகள் அங்கங்கே சில நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இதைக் கட்டுப்படுத்தும் அளவுக்கோ கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்ததாகவே இல்லை. அப்படி இந்தத் தரப்புகள் அனைத்தும் செயற்பட்டிருந்தால் இன்றைய அதிகரிப்பு நிலை ஏற்பட்டிருக்காது அல்லவா! ஆகவே இனியும் தாமதிக்காமல், ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாமல் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இது மிகமிக அவசியமானது.

போதைப் பொருட் பாவனையில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைய தலைமுறையினரே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். சிலர் இதற்காக வன்முறைகளிலும் திருட்டிலும் ஈடுபடுகின்றனர். அண்மையில் யாழ்ப்பாணத்தில் சகோதரால் சகோதரி ஒருவர் பாலியல் வன்முறைக்குள்ளாகிய நிலையில் தற்கொலை செய்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

இதெல்லாம் நல்ல அறிகுறிகளல்ல. இளைய தலைமுறை பாதிக்கப்பட்டால் எதிர்காலச் சமூகமே பாதிப்புக்குள்ளாகும். இன விடுதலை, தேச விடுதலை என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இனத்திற்கும் தேச விடுதலைக்கும் உரியவர்கள் எங்களுடைய இளைய தலைமுறையினரே. ஆகவே நிலத்தைப் பாதுகாப்பதைப் போல, எமது மொழியை, பண்பாட்டை, வளங்களைப் பாதுகாப்பதைப் போல எமது இளைய தலைமுறையையும் நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களே எமது மிகச்சிறந்த வளமாகும்.

எனவே, இதைக்குறித்து நாம் மிகக் கரிசனை கொண்டு செயற்பட வேண்டும். ஆனால் இந்த மாதிரிப் பிரச்சினைகளுக்கு ஏதாவது தொண்டு நிறுவனங்கள் நிதி அளித்தால் மட்டுமே விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்று பலர் கருதுகிறார்கள். சுயஈடுபாட்டுடன் இதைக் குறித்துச் செயற்படுவதற்கான ஆட்கள் குறைவாகி விட்டது என்று தெரிவித்துள்ளார் சந்திரகுமார்.

போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டோரை சிகிச்சையளித்துப் பராமரிப்பதற்கான நிலையங்கள் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி (தருமபுரம்) போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இதில் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் சிகிச்சைக்கு அனுப்ப வேண்டிய நிலையில் உள்ளனர். இதை விட போதைப் பொருள் பாவனைக்குட்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் மிகுந்த மன நெருக்கடிக்கும் வாழ்க்கைச் சிக்கல்களுக்கும் உள்ளாகிய நிலையில் பலர் இருக்கிறார்கள். இவ்வாறான நிலை முன்னர் ஒருபோதுமே இங்கே இருந்ததில்லை. ஆகவே நிச்சயமாக இது சமூகத்தின் வீழ்ச்சியே ஆகும்.

நாளைக்கு உங்களுடைய உறவுச் சூழலில், உங்களுடைய பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் இவ்வாறு பாதிக்கப்படலாம். ஏனென்றால் தினமும் கஞ்சா, போதைப் பொருட்கள் போன்றவற்றைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் நடக்கின்றன. இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது ஒரு தொகுதி பொருட்கள் கரையில் ஒதுங்கியுள்ளதாக வடக்குக் கடற்கரைப் பிரதேசமொன்றிலிருந்து செய்தி வந்துள்ளது. கைப்பற்றப்படுவதை விட பாவனையாளர்களின் கைகளுக்கு மாறிக் கொண்டிருப்பதே அதிகமாகும்.

ஆகவே தாமதிக்காமல் இதைக் கட்டுப்படுத்தக் கூடிய, முறியடிக்கக் கூடியவாறு விரைந்து செயற்பட வேண்டும். இதற்கு முருகேசு சந்திரகுமார் கூறுவதைப் போல, ஏதாவது தொண்டு நிறுவனம் உதவினால் தான் எம்மால் விழிப்புணர்வைச் செய்ய முடியும் என்று காத்திருக்காமல் உடனடியாகவே களத்தில் இறங்கி வேலை செய்ய வேண்டும். பாடசாலைகளில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியம். வீட்டிலும் பெற்றோர் பிள்ளைகள் தொடர்பாக கூடுதலான கரிசனையைக் கொள்வது தேவை. மாற்று வழிமுறைகளைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

இதோடு நாம் மேலும் சில விடயங்களைப் பார்க்க வேண்டும். இளவயதுக் கர்ப்பங்களும் வடக்கில் அதிகமாகி விட்டது. கர்ப்பமாகிய பெண்கள் கைவிடப்படுவதும் கூடியுள்ளது. இதைக்

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



குறித்த புள்ளி விவரங்களோடு செய்தி அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன். இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியவர்களைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கான மையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே சிறுவர் இல்லங்களில் பிள்ளைகள் சேரும் எண்ணிக்கையும் அதிகமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு முடிவற்குள் இவ்வாறு சேர்க்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இதெல்லாம் ஒரு சமூகத்துக்கு ஆரோக்கியமான விடயங்களே அல்ல. தொழிற்சாலைகள், உற்பத்தி மையங்கள், ஆய்வகங்கள் என உருவாக்கப்படும் இடத்தில் —சூழலில் — இப்படி போதைப் பொருள் சிகிச்சை மையங்களும் சிறுவர் இல்லங்களும் இளவயதுக் கர்ப்பவதிகளைப் பராமரிக்கும் நிலையங்களும் உருவாகினால் சமூகத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும்? ஆனால், இதைப் பற்றிக் கவலை கொள்வோர் குறைவு. தமிழ் அரசியற் தரப்பினர் இந்த உகத்திலேயே இல்லை. அவர்கள் வேறு ஏதோ உலகத்தில் ஏதோவெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். போதாக்குறைக்குப் புலிகளின் போராளிகளை நிராகரித்துக் கொண்டு புலிகளைப் பற்றிப் பேசி வாழ்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடி, இன நெருக்கடி போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்ச்சமூகம் இப்பொழுது இந்த மாதிரிச் சமூக நெருக்கடியிலும் சிக்கியுள்ளது. ஆக மொத்தத்தில் அதிகமான நெருக்கடிகளுக்கு தமிழ்ச்சமூகம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஒரு சமூகம் பல நெருக்கடிகளுக்குள்ளாகுமாக அல்லது பல நெருக்கடிகள் ஒரு சமூகத்தைப் பாதிக்குமாக இருந்தால் அதனுடைய வளர்ச்சி பாதிக்கப்படும்.

இதற்கு மாற்றுப் பொறிமுறைகள் அவசியம். அதைக்குறித்து சிந்திப்பதே நமது கடமையாகும். முக்கியமாகப் பிள்ளைகளை மிக இளைய வயதிலேயே வாசிப்பில் ஈடுபடுத்த வேண்டும். புத்தக வாசிப்பு மிக முக்கிமான ஒன்றாகும். ஒரு நூலகம் திறக்கப்படும்போது 100 சிறைச்சாலைகள் மூடப்படும் என்றார் சீனத்தலைவர் மாவோ சேதுங். கற்பதே முதன்மைச் செயற்பாடு என்றார் ரஷ்யத் தலைவர் லெனின். வாசிப்பதால் மனிதர் சூரணமடைகிறார்கள் என்று கூறினார் மகாத்மா காந்தி. பிள்ளைகளை வாசிப்பில் ஈடுபடுத்துங்கள். அவர்கள் சிறந்த, ஆற்றல் உள்ளவர்களாக மாறுவர் என்று உரைத்திருக்கிறார் அறிஞர் அப்துல் கலாம். (22ம் பக்கம் பார்க்க)

# பறி போகும் கேந்திர முக்கியத்துவம்!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -




இலங்கை கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்திருந்தாலும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களைக் கொண்டிருந்தாலும், அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியுள்ளதால், வாய்ப்புகளை இழக்கின்ற நிலை உருவாகியுள்ளது.

திருகோணமலை ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க துறைமுகமாக இருந்த போதும், 30 ஆண்டுகளுக்குப் பின்னர், அங்கிருந்து கடந்த வாரம், இல்மனைட் ஏற்றிய கப்பல் ஒன்று சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறது.

திருகோணமலைத் துறைமுகத்தை மூன்று தசாப்தங்களாக ஏற்றுமதி துறைமுகமாக அபிவிருத்தி செய்யாமல் இருந்தமை அரசாங்கத்தின் தவறு. இதன் மூலம், திருகோணமலைத் துறைமுகத்துக்கு இருந்த கேந்திர முக்கியத்துவம், வீணடிக்கப்பட்டிருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாக, ஏற்றுமதி, இறக்குமதியைக் கையாளும் வாய்ப்புகள் குறைவாக இருந்த போதும், அதன் அபிவிருத்திக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அதற்காக செலவிடப்பட்ட நிதியை மீளத் திரட்டிக் கொள்ள வாய்ப்பில்லாத நிலையில் தான், அந்த துறைமுகத்தை, சீனாவிடம் இழக்க நேரிட்டது. அத்துடன் பிராந்திய அதிகாரப் போட்டிக்கான கதவுகளையும் அது திறந்து விட்டது.

கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் விவகாரத்திலும், ஏற்படுத்தப்படும் தாமதங்களும், இழுபறிகளும் கூட, இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

ஏனென்றால், கொழும்பு துறைமுகத்தின் வாய்ப்புகளை தட்டிப் பறிக்கின்ற புதிய துறைமுக முதலீடுகள் பிராந்தியத்தில் அதிகரித்து வருகிறது.

கொழும்பு துறைமுகத்தின் ஊடாக கையாளப்படுகின்ற 70 வீதமான கொள்கலன்கள், இந்தியாவுடன் தொடர்புபட்டவை. இந்தியா உலகின் இரண்டாவது பெரிய சனத்தொகையையும், விசாலமான நிலப்பரப்பையும் மூன்று பக்கங்களிலும் ஆழ்கடலினால் சூழப்பட்டிருப்பினும், அதன் துறைமுகங்கள் வளர்ச்சி அடையவில்லை.

கொல்கத்தா, மும்பை போன்ற பழமையான துறைமுகங்களைக் கொண்டிருந்தாலும், இந்தியாவின் பெரும்பாலான இறக்குமதி, ஏற்றுமதிகளை கொழும்பு துறைமுகமே கையாளுகிறது.

உலகின் மிகவும் பரபரப்பான 10 துறைமுகங்களுக்குள் சீனாவின் ஆறு துறைமுகங்கள் இருக்கின்றன.ஆனால் இந்தியாவின் மும்பை துறைமுகம் 35 ஆவது இடத்திலும், குஜராத்தின் முந்த்ரா துறைமுகம் 39ஆவது இடத்திலும் உள்ளன.

மும்பை துறைமுகத்துக்கு முன்னால், சீனாவின் 11 துறைமுகங்கள் இருக்கின்றன. இந்தப் பட்டியலில் கொழும்பு துறைமுகம் 25 ஆவது இடத்தில் உள்ளது.

இந்த நிலை நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்கும் என்று கூறமுடியாது. ஏனென்றால், கொள்கலன் போக்குவரத்து தான் இன்று உலக வர்த்தகத்தின் உயிர் நாடி.

இந்தியாவின் உள்நாட்டு வர்த்தகம், நெடுஞ்சாலை வழி போக்குவரத்தை அதிகம் நம்பி யதாக உள்ளது. பரந்த நிலப்பரப்பில், கப்பல் வழியாக பொருட்களை கொண்டு செல்லும் முறை அங்கு வளர்ச்சி பெறவில்லை. ஆனால் அது மிகவும் மலிவானது. இந்த நிலையில் இருந்து மாறுவதற்கு எத்தனிக்கும் இந்தியா, தன்னைச் சூழ துறைமுகங்களை அமைக்க முயற்சிக்கிறது. இப்போது உலகின் இரண்டாவது பணக்காரராக மாறியுள்ள கௌதம் அதானியின், அதானி குழுமமே, துறைமுகங்களை கட்டியாளும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது.

அதானி குழுமம் தற்போது இந்தியாவில் 13 துறைமுகங்களை இயக்குகிறது அல்லது அபிவிருத்தி செய்து இயக்கும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இந்த நிலையில் மேற்கு வங்கத்தில் உள்ள தாஜ்பூர் துறைமுகத்தை 3 பில்லியன் டொலர் செலவில் அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு அதானி குழுமத்துக்கு கடந்த திங்கட்கிழமை அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த துறைமுகங்களை அதானி குழுமம் அபிவிருத்தி செய்து போது, கொழும்பு துறைமுகத்துக்கான முக்கியத்துவம் குறையும் ஆபத்து உள்ளது.

இந்தியாவின் 70சதவீத கொள்கலன்களை கையாளுகின்ற கொழும்பு துறைமுகத்திடம் இருந்து, 20 சதவீத வாய்ப்புகள் இழக்கப்பட்டால் கூட, அது இலங்கைக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். கொழும்பு துறைமுகத்தின் கேந்திர வாய்ப்புகள் ஏற்கனவே பறிபோகத் தொடங்கி விட்டது.

பங்களாதேஷின் சிட்டகொங் துறைமுகத்தில் இருந்து, டுபாய் துறைமுகத்துக்கு நேரடி கொள்கலன் கப்பல் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது கொழும்பு துறைமுகத்துக்கான வருவாயில் பாதிப்பை ஏற்படுத்தும். தற்போது, சிட்டகொங் துறைமுகத்தில் இருந்து கொள்கலன்கள் சிறிய கப்பல்களின் மூலம், கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு, பாரிய கொள்கலன் கப்பல்கள் மூலமே, டுபாய்க்கு அனுப்பப்படுகிறது.

அவ்வாறே டுபாயில் இருந்து வரும் கொள்கலன்கள், கொழும்பு துறைமுகம் ஊடாகவே, சிட்டகொங் துறைமுகத்தை அடைகிறது.

பங்களாதேஷ் சனத்தொகை அதிகம் உள்ள நாடு என்பதால் அதற்கான ஏற்றுமதி இறக்குமதி வாய்ப்புகள் அதிகம். சிட்டகொங் துறைமுகம் உலகின் பரபரப்பான துறைமுகங்களின் பட்டியலில் 58ஆவது இடத்தில் உள்ளது. இந்த துறைமுகம் ஊடாக இடம்பெறும் ஏற்றுமதி இறக்குமதியில் 90சதவீதம் பங்களாதேசுடன் தொடர்புடையது. ஏனையவை இந்தியா, நேபாளம், பூட்டானுக்கான ஏற்றுமதி இறக்குமதிகளாகும். இவ்வாறான துறைமுகத்தில் இருந்து மாதத்தில் மூன்று பாரிய கப்பல்கள், டுபாய்க்கு இயக்குவதற்கு கப்பல் நிறுவனம் ஒன்று முன் வந்துள்ளது.

இந்தக் கப்பல்கள் 1700கொள்கலன்களை ஏற்றிச் செல்லக் கூடியவை. இதனால் கொழும்பு துறைமுகம் இருவழிப் பயணங்களிலும் மாதத்துக்கு, 10,200 கொள்கலன்களின் வருகையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, தற்போது கொழும்பு ஊடாக மேற்கொள்ளப்படும் கொள்கலன் பரிமாற்றத்துக்காக ஏற்படும் 45 நாட்கள் என்ற காலம், 18 நாட்களாக குறையும். இதனால் 20 அடி கொள்கலன் ஒன்றுக்கான செலவினம், 150 தொடக்கம், 200 டொலர்களால் குறையும் என்று கூறப்படுகிறது.

அவ்வாறானில், கொள்கலன் ஒன்றுக்கு 50 டொலர்களை பெறும் வாய்ப்பை கொழும்பு துறைமுகம் இழந்தால் கூட, கிட்டத்தட்ட மாதம் ஒன்றுக்கு 5 இலட்சம் டொலர்கள் வரை இழப்பு ஏற்படும்.

வருடத்தில், இந்த இழப்பு, கிட்டத்தட்ட 6 மில்லியன் டொலர்களை நெருங்கும். இது குறைந்தபட்ச கணக்கு மட்டுமே.

சிட்டகொங்- டுபாய் இடையே நேரடியான கொள்கலன் கப்பல் போக்குவரத்து தொடங்குவதே இந்தளவு பாதிப்பை கொழும்பு துறைமுகத்துக்கு ஏற்படுத்துமானால், இந்தியாவிலுள்ள துறைமுகங்களில் இருந்து அவ்வாறான ஏற்றுமதிகள் ஆரம்பிக்கப்பட்டால் கொழும்பு துறைமுகத்தின் கதி என்னவாகும்?

கொழும்பு துறைமுகத்தின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு, அரசாங்கங்களோ, தொழிற்சங்கங்களோ, எதிர்க்கட்சிகளோ செயற்படவில்லை.

கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை விரைவாக முன்னெடுத்திருந்தால்இந்தியா போன்ற நாடுகள், தங்களின் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் அதிக அக்கறை செலுத்தியிருக்கமாட்டாது. கப்பல்களில் இருந்து பொருட்களை விரைவாக ஏற்றி இறக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தால், கப்பல் கட்டணங்கள் குறையும், களஞ்சியக் கட்டணங்கள் குறையும், சரக்குப் பரிமாற்றக் காலமும் குறையும். (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தந்திரம் பழகாமல் மற்றவர்களின் தந்திரத்தைப் பழிப்பதால் பயனில்லை

திலீபனின் 5 ஆவது நினைவு தினம் அடிபிடிகளுடன் நினைவு கூரப்பட்டிருக்கின்றது. சில கோரிக்கைகளை முன் வைத்து, 1987–ஆம் ஆண்டு தீலியன் தனது உணவு தவிர்ப்பை மேற் கொண்டிருந்தார். கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், 12வது நாளில் உயிர் நீத்தார். அன்றைய சூழலில் 'தீலியனின் உயிரிழப்பு மக்கள் மத்தியில் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது.

தமிழ் தேசிய அரசியல் போராட்ட வரலாற்றில் உணவை தவிர்த்து உயிர் நீத்த ஒரேயொருவர் தீலிபன் மட்டும் தான். அன்னை பூபதிக்கும் இவ்வாறானதொரு வரலாறிருந்தாலும் கூட அவர் ஒரு சாதாரண குடிமகளாவார். காந்தி தேசம் திலிபனைக் காப்பாற்றியிருக்கலாம் ஆனால் கைவிட்டு விட்டது என்றவாறான குரல்களை இப்போதும் சிலர் சொல்வதை கேட்க முடிகின்றது. அரசியலில் எப்போதும் மாற்றங்களை அவதானிக்க வேண்டும். அந்த மாற்றங்களிலிருந்து எதிர்காலத்திற்கான அரசியல் போக்கை தீர்மானிக்க வேண்டும்.

ஒரு காலத்தின் விடயங்களை பிறிதொரு காலத்தில் பேசுவதன் மூலம், நிகழ்காலத்தை ஒரு போதுமே கையாள முடியாது. திலீபன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர். அவர் ஏன் உணவு தவிர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்தார்? ஆயுத விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையுள்ளவர், ஆயுதங்கள் மூலமல்லாவா தனது இலக்கை அடைந்து கொள்ள முயற்சித்திருக்க வேண்டும்? ஆயுதப் போராட்டத்தின் மீது உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஒரு இயக்கத்தின் உறுப்பினரை, சாத்வீக வழிப் போராட்டத்தை நோக்கித் தள்ளிய காரணி எது?

இன்று தீலிபனின் தியாகத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டுமென்று கூறிக் கொண்டிருப்பவர்கள் எவராவது இவ்வாறான கேள்விகளை தங்களுக்குள் கேட்டதுண்டா? தீலிபனின் நினைவு தினத்தை முன் வைத்து தங்களுடைய கட்சியரசியலை செய்வதற்காக மற்றவர்களது மேலங்கியை இழுத்து, அடிபட்டுக் கொண்டிருக்கின்ற கட்சிகளின் தலைவர்கள் இது தொடர்பில் சிந்தித்ததுண்டா?

திலீபனின் நீர்மானத்தை தர்க்க ரீதியாக அணுகுவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கம். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து, இந்திய அமைதிப் படைகள் வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருந்த காலத்தில் தான், திலீபன் உணவு தவிர்ப்பு தீர்மானத்தை மேற்கொண்டிருந்தார்.

எனவே பலம்பொருந்திய நாடான இந்தியாவுடன் நேரடியாக மோதச் செல்வது புத்திசாலித்தனமான விடயமல்ல என்னும் புரிதலிலிருந்து தான் திலிபன் இவ்வாறானதொரு தீர்மானத்திற்கு வந்தாரா? நேரடியாக மோதும் தீர்மானத்தை கைக் கொண்டிருந்தால், உணவு தவிர்ப்பு தீர்மானத்திற்கு அவர் வந்திருக்க முடியாது.

எனவே தர்க்க ரீதியாக நோக்கினால், திலீபன் இந்தியாவுடன் மோதும் முடிவுக்கு மாறாக, சாத்வீக முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் இந்தியாவின் அணுகு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாமா என்றே சிந்தித்திருக்கின்றார். தனது தீர்மானத்தில் உறுதியாக இருந்ததன் விளைவாகவே உயிர் நீத்திருக்கின்றார். ஆனால் தீலிபனுக்கு பின்னர் அவரது தீர்மானம் ஒரு அரசியல் போக்காக கைக்கொள்ளப்படவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால், திலீபனின் தியாகம் 35 ஆண்டுகளுக்கு முன்பாகவே கைவிடப்பட்டு விட்டது. எனவே திலிபனின் தியாகத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டுமென்னும் வாதம் தர்க்க ரீதியில் காலமாகிப் போன வாதமாகும்.

திலிபனை நினைவு கான்பதும், அவரது சிந்தனைகளை தியாகத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டுமென்று கூறுவதற்கும் இடையில் பாரிய வேறுபாடுண்டு தர்க்கத்தின் பலனை சாதகமாகக் கொண்டே இவ்வாறானதொரு வாதத்தை இந்தக் கட்டுரையாளர் முன் வைக்கின்றார்:

இந்தத் தாக்கத்தை உடைக்க விரும்புவர்கள் தங்களது எதிர் தர்க்கங்களை முன்வைக்கலாம். அரசியலில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நாம் மாறாது



விட்டால், குறிப்பிட்ட சூழலை நம்மால் கையாள முடியாமல் போயவிடும். பிராந்திய மற்றும் உலக அரசியல் போக்குகள் உள்ளூர் அரசியலை எப்போதுமே பாதித்துக் கொண்டேயிருக்கும். இந்த பாதிப்புக்களால் நமது அரசியல் நகர்வுகள் மாற்றங்களுக்குள்ளாகும். இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ள மறுக்கும் அரசியல் போக்குகள் பயனற்றவை. 1949ஆம் ஆண்டு. இலங்கை தமிழாக கட்சியை, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உருவாக்கினார். அன்றிலிருந்து இன்று வரையில் நாம் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை கோரி வருகின்றோம். ஆனால், எங்களால் அதனை அடைய முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ விடயங்கள் நடந்து முடிந்து விட்டன.

இவ்வாறு நடந்து முடிந்த விடயங்களுக்காக மற்றவர்கள் மீது பழி போட்டுக் கொண்டிருப்போமானால், எமது வாழ்நாள் முழுவதும் பழிபோடுவதிலேயே முடிந்து போகும். மற்றவர்கள் மீது பழிபோடும் நாமோ, மறுபுறம் நம்மை நோக்கி கேள்விக கேட்க அஞ்சுகின்றோம்:

ஒரு லத்தீனமெரிக்க கவிஞர் சொல்வது போல், நாம் பய விமர்சனத்திற்கு நடுங்கி அஞ்சுகின்றோம் ஏனெனில் சுய விமர்சனம் தற்கொலைக்கு சமனானது அரசியலில் – அடையும் வழி முறை தெரியாமலேயே, தனி நாட்டுக்கான கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

ஏனெனில் தனிநாட்டை அடைவதற்கான வழி முறை தெரியாமலேயே, செல்வநாயகம் அந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். செல்வநாயகத்திற்கான பதிலாகவே ஆயுத விடுதலைப் போராட்டம் எழுச்சியும் அது தனி நாட்டை அடையும் வழி முறையாகவே ஆயுதப் போராட்டம் நோக்கப்பட்டது. அனைத்து இயக்கங்களின் ஆரம்ப கால இலக்கும் தனி நாடாகவே இருந்தது. ஆனாலும் இந்தியாவிற்கு அவ்வாறானதொரு செயற்பாடு எவ்வாறு வரலாற்றாய் நியாயப்படுத்தப்பட்டதோ, அதே போன்று, தனது முடிவும் வரலாற்றால் நியாயப்படுத்தப்படுமென்றே. அவர் நம்பியிருந்தார்.

ஒரு வேளை அவர் வெற்றி பெற்றிருந்தால் நிச்சயம் அவரது செயற்பாடுகள் வரலாற்றால் நியாயப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் தோல்வி அனைத்தையும் செல்லாக் காசாக்கி விட்டது. தோல்வி எப்போதுமே அப்படித் தான். இதனால் தான் வரலாறு என்பது எப்போது வெற்றி பெற்றவர்களின் வரலாறு என்பார்கள்.

இந்தியாலய விடுதலைப் புலிகள் அனுகிய முறைமை தவறென்பதையே வரலாறு நிரூபித்து விட்டது. இந்தியாவை தவிர்த்து, புறம் தள்ளி, தங்களது இலக்கை அடைய முடியுமென்றே பிரபாகரன் நம்பினார். ஒன்றை நம்புவது தவறல்ல ஆனால் அது தோல்வியுற்ற பின் அவர் அந்த நம்பிக்கையை நியாயப்படுத்த முற்படுவதும், அதனை சரியென்று நம்பி செயற்பட எத்தனிப்பதும் தான் தவறானது.

இப்போது திரும்பிப் பார்த்தால் நமது கடந்த காலம் போதுமான படிப்பினைகளைத் தந்திருக்கின்றது. இந்த படிப்பினைகளிலிருந்து நாம் சிந்திக்க வேண்டும். இன்றைய சூழலை எவ்வாறு கையாளுவதென்று சிந்திக்க வேண்டும்.

ஒரு பிரஞ்சு பாதிரியர் எழுதியிருந்தார். அதாவது, சூத்திரங்களில் சுகம் காணுதல், வெறும் சுலோகங்களிலும், வசனங்களிலும் அரசியலை முன் கொண்டு செல்ல முடியாது விடுதலைப் புலிகள், அவர்கள் நம்பிய ஒன்றிற்காக இயங்கக் கூடிய அர்ப்பணிப்புடன் இருந்தனர். அந்தளவிற்கான அர்ப்பணிப்பை விட்டு விடுவோம், ஆகக் குறைந்தது. தாங்கள் கூறுகின்ற முன் நியாயத்திற்காக தங்களது வாழ்வியல் நலன்களை இழந்து செயற்படுவதற்கு எத்தனை பேரால் முடியும்?

இன்று தமிழ் தேசிய அரசியல் என்பது பெருமனாவிற்கு தேதல் அரசியலாகவும், சைபர் தாரியலாகவும் சுருங்கி விட்டது. தாயகத்தில் தேர்தல் அரசியல் என்றால், புலம்பெயர் நாடுகளில், சைபர் தேசியம், ஒரு குறுந் தகவலை வட்ஸ் அப்பில், போட்டுவிட்டால் தேசிய பணி முடிந்து விட்டது. முகநூலில் ஒரு வரை திட்டி வசை எழுதி விட்டால் தேசிய பணி முடிந்து விட்டது.

இவ்வாறான நிலையில் தானே இன்றைய தமிழ் தேசிய அரசியல் இருக்கின்றது. ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும், எங்களை நம்பியிருக்கும் மக்களை பாதுகாக்க முடியா விட்டால், அதன் பின்னர் நாம் பேசும் அரசியலால் எவ்வித பயனும் இல்லை. மக்களின் வாழ்நிலையை மேம்படுத்த முடியாத தேசியத்தால் என்ன பயன்? உண்மையில் தேசியம் என்பதே ஒரு மக்களின் நிமிர்ந்த நிலை தான் மக்களின் நிமிர்ந்த நிலையை ஒரு இரவில் ஏற்படுத்தி விட முடியாது.

இது ஒரு அஞ்சல் ஓட்டம் போன்றது. ஒருவரால் ஒரு குறிப்பிட்ட தூரம் தான் ஓட்ட முடியும். அதன் பின்னர் மற்றவரும், அதன் பின்னர் மற்றவரும், இப்படித்தான் நமது அரசியலும் நல்ல விடயங்களை எடுத்துக் கொள்வது

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



போன்று, நமது தவறுகளை விமர்சித்துக் கொண்டு, அதிலிருந்து கற்றுக்கொண்டு, முன்னோக்கி பயணிப்பதற்கான திடசங்கற்பத்தை பெற வேண்டும்.

இருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு தான், இல்லாததை பற்றி சிந்திக்க முடியும். தமிழ் மக்கள் மிகவும் பலவீனமான மக்கள், பலவீனமான மக்கள் எப்போதும் நண்பர்களை அதிகரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஆனால் நாமோ தேவையற்ற வகையில் எதிரிகளை அதிகரிப்பது பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்

எதிரிகளை அதிகரிப்பதில் நம்மில் சிலருக்கோ அலாதி பிரியம். ஆனால் வரலாறு நமக்கு சொல்லும் பாடமோ வேறு, அதாவது, எதிரிகள் அதிகரிக்க, அதிகரிக்க நாம் இழந்து கொண்டேயிருப்போம். இந்தியாவை எதிரியாக்கியதால், தமிழினம் இழந்தவையோ ஏராளம். அதற்காக எவரதும் காலில் விழவேண்டுமென்று நான் கூறவில்லை.

நாம் பகைமைக்கும் செல்லக் கூடாது, அதே வேனை எங்களுடைய நலன்களையும் வெற்றிக் கொள்வதற்கான உறுதியையும் இழக்கக் கூடாது. காலம் நமக்கு சாதகமாக மாறும் போது வட்டியும் முதலுமாக எடுக்கக் கூடியவற்றை எடுத்துக் கொள்வதற்கான தந்திரத்தோடு இருக்க வேண்டும்.

தந்திரோபாயமாக விடயங்களை கையாளும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் பைபிளின் படி, மனித குலம் பெருகியது பாம்பினாலே தவிர, கடவுளால் அல்ல, அரசியலில் தந்திரம் மிகவும் முக்கியமானது. நாம் தந்திரம் பழகாது, மற்றவர்களின் தந்திரத்தை பழித்துக் கொண்டிருப்பதால் எவ்வித பயனுமில்லை .

எனவே தமிழ் மக்களின் நலன் தொடர்பில் உண்மையிலேயே அக்கறையுள்ளவர்கள், தற்போது கை வசமுள்ள வாய்ப்புக்களை நிச்சயாக பயன்படுத்திக் கொண்டு, முன்னோக்கி, பயணிப்பது தொடர்பில் மட்டும் தான் சிந்திக்க வேண்டும்.

இந்தியா தொடர்பில் நாம் தவறிழைத்திருக்கின்றோம் என்பதை புரிந்து கொண்டு, இந்தியாவை அணுகுவது தொடாபிக் சிந்திக்க வேண்டும். பலம் பொருந்திய நாடுகளை திட்டுவதால் எந்தவொரு நன்மையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் நம்மால் அவர்களை தீண்ட முடியாது.

# தமிழகத்தின் “நச்சு” அரசியல் சக்தி!

தமிழகத்தில் ஏனைய வட இந்திய மற்றும் தென்னிந்திய மாநிலங்களைப் போல் மத ரீதியிலான வெறுப்பைப் பரப்பும் அரசியலுக்கு இடமில்லை. இங்கு பகுத்தறிவுவாதிகளும், திராவிட சிந்தனையாளர்களும் அதிகம் என்பதால் மத சார்பற்ற மற்றும் மனிதநேயமிக்க



அரசியலுக்கும் அது சார்ந்த நடவடிக்கைகளும் தான் அதிகம். ஆனால் இந் நிலை மாறக்கூடும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஏனெனில் இந்து மதம் குறித்த தீவிர சிந்தனையுடைய ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் பேரணி, தமிழகத்தில் நடைபெறுவதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளுடன் சென்னை உயர்நீதிமன்றம் அனுமதியளித்திருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, அரசியல் உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதிலும் இந்திய விடுதலைக்காக அகிம்சை முறையில் போராடி, மக்களை ஒன்று திரட்டிய மகாத்மா காந்தியின் நினைவு நாளன்று இந்திய அரசால் பல முறை தடை செய்யப்பட்ட இயக்கத்தின் பேரணிக்கு, 50க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்த அனுமதித்திருப்பது தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அதிர்ச்சியளித்திருக்கிறது.

இது தொடர்பாக தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் ‘தமிழகத்தை நச்சு அரசியல் சக்திகள் ஆக்கிரமிக்கிறது’ என குறிப்பிட்டிருக்கின்றார். மதவெறி மற்றும் பிரித்தாளும் சூழ்ச்சி போன்றவற்றால் இந்திய திருநாட்டில் பல்வேறு வன்முறைகளையும், கலவரங்களையும் நிகழ்த்தியுள்ள ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு தமிழகத்தில் பேரணி நடத்த அனுமதி வழங்கியிருப்பது எதிர்த்து, தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

மேலும் தமிழகம் அமைதி பூங்கா தான் என்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கும், தமிழகத்தை களமாகக் கொண்டு இயங்கும் முற்போக்கு இயக்கங்களுக்கும் உள்ளது என்பதனை உணர்ந்து, இவ்விடயத்தில் தமிழக அரசியல் கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும் என்பது பலரது கோரிக்கையாகவும் உள்ளது.

இதனிடையே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் பேரணிக்கு அனுமதி வழங்கிய தீர்ப்பை எதிர்த்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரான தொல். திருமாவளவன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறார். அதில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் பின்னணியை பரிசிலீக்காமல் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

காந்தியின் படுகொலையை ஆர்.எஸ்.எஸ். இயக்கம் கொண்டாடியது. அவரது பிறந்த தினத்தில் ஊர்வல நடத்த ஆர்.எஸ்.எஸுக்கு அனுமதி அளித்திருப்பது நியாயமற்றது. மாநில பாதுகாப்பு, பொது அமைதியை கருதி, அனுமதி மறுத்திருக்க வேண்டும். இதனால் ஆர்எஸ்எஸ் இயக்கத்திற்கு பேரணி நடத்த அளிக்கப்பட்ட உத்தரவை திரும்ப பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் பல தீர்ப்புகள், மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசிற்கு சாதகமாகவே வெளியாகி இருக்கிறது. இதன் பின்னணியில் மறைமுக நிர்ப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் அரசியல் காரணங்கள் இருக்கக்கூடுமென சந்தேகம் கொள்கிறோம். இது தொடர்பாக வெளிப்படையான விவாதத்திற்கு மதசார்பற்ற அரசியலை நேசிக்கும் ஜனநாயக தலைவர்கள், நீதியரசர்கள், கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் பங்கு பற்றி விவாதித்து, இதனை தெளிவுபடுத்த வேண்டியதும் அவசியமாகின்றது.

ஆர்.எஸ்.எஸ் இயக்கம், மக்கள் நலனுக்கான அமைப்பு என்றும், இந்த அமைப்பு தற்போது தமிழகத்தில் வளர்ச்சி அடைந்து வருகிறது. அதனை மேலும் மேம்படுத்துவதற்காகவும், மக்களை ஒருங்கிணைப்பதற்காகவும், மக்களிடத்தில் இந்து மதம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த பேரணி நடைபெறுகிறது என்றும் ஏற்பட்டாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதனிடையே தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான ஆ.ராசாவின் சர்ச்சைக்குரிய பேச்சை கண்டித்து, பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ். எஸ் இயக்கத்தினர் இணையத்தில் தொடர்ந்து, ‘ராசாவை கைது செய்ய வேண்டும் என்றும், அவரின் மக்களவை உறுப்பினர் பதவியை பறிக்க வேண்டும் என்றும், அவரை தி.மு.க.விலிருந்து நீக்க வேண்டும் என்றும், பல்வேறு நெருக்கடிகளை அழுத்தங்களை தொடர்ச்சியாக அளித்து வருகின்றனர்.

ஆனால் இது குறித்து தொடர்ந்து மௌனம் சாதித்து வரும் தி.மு.க. தலைவர் ஸ்டாலின், அண்மையில் தொண்டர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், மக்களுக்கான பணியை கவனிப்போம். நச்சு அரசியல் சக்திகளுக்கு இடம் அளிக்கும் பேச்சுகளை தவிர்ப்போம். என்று குறிப்பிட்டு, இது தொடர்பான திமுகவின் எண்ணங்களை, அக்கட்சியின் தொண்டர்களிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

அந்த வகையில், எந்த வகையிலாவது தமிழ்நாட்டில் காலூன்றி விட வேண்டும் என நினைக்கின்ற மதவெறி நச்சு சக்திகள், இதுபோன்ற சூழல்களை பயன்படுத்திக் கொண்டு, தங்களை வளர்த்துக் கொள்ள முடியுமா, என்று எதிர்பார்க்கின்றன. மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கி, கலகம் விளைவிக்க பார்க்கின்றனர். அதற்காக கழக நிர்வாகிகள், அமைச்சர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளை தவறான பொருள்படியான வாசகங்களுடன் வெளியிட்டு, அவற்றை தங்களுக்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள். இதன் மூலம் தி.மு.க., பா.ஜ.க. விடயத்தில் சர்வ எச்சரிக்கையுடன் செயல்படுகிறது என்பதை முதல்வர் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார் என்பது உறுதியாக தெரிய வருகிறது. இதன் மூலம் பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ.எஸ். ஆகிய கட்சியும், அமைப்பும் தமிழகத்தில் வளர துடிக்கிறது. ஆனால் அவை தவறான பாதையை தெரிவு செய்து பயணிக்கின்றன என்பதனை மக்கள் உணர்வார்கள். அது மட்டுமல்லாமல், அதற்கான சரியான பதிலடியைத், தேர்தலில் வாக்காக வழங்குவார்கள் என்றும் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

இந்நிலையில் தமிழகத்தில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஏனைய இந்து அமைப்புகள், தங்களுடைய களச் செயற்பாடுகளை தீவிரப்படுத்தியதற்கு அ.தி.மு.க.வின் பலவீனமான நிலையே காரணம் என்றும், அக்கட்சி ஒற்றை தலைமை குறித்த உட்கட்சி பூ சலில் சிக்கியிருப்பதால், பொதுமக்களிடத்தில் தி.மு.க. —அ.தி.மு.க. என்ற இரு துருவ அரசியலின் வலிமையும் வீரியமும் குறைந்து, தி.மு.க.- பா.ஜ.க. என்ற சித்தாந்த அரசியல் உண்டாகியிருப்பதாகவும் தெரிவிக்கிறார்கள்.

இதனிடையே கடந்த நான்காண்டு கால எடப்பாடியாரின் ஆட்சியின் போது,

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**- குடந்தையான் -**

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் பேரணிக்கு அனுமதியளிக்கப்படவில்லை என்பதும், இவ்விடயத்தில் அ.தி.மு.க. காட்டிய உறுதியை, தி.மு.க. காண்பிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

பா.ஜ.க.வின் அரசியல் செயல்பாடுகளை ‘நச்சு அரசியல் சக்தி’ என தி.மு.க. குறிப்பிட்டாலும், அக்கட்சியின் தலைமை, தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சிற்கு கடிவாளம் போட்டிருப்பதாகவும், எச்சரிக்கையுடன் பொதுவெளியில் பேச வேண்டும் என்றும் கூறியிருக்கின்றது.

தற்போது கூட பா.ஜ.க. மற்றும் ஆர். எஸ்.எஸ். இயக்கம், பொதுமக்களிடத்தில் இந்து மத சார்ந்த நேர்மறையான விடயங்களை (22ம் பக்கம் பார்க்க)


றொரன்ரோ பல்கலைக்கழக மாணவர்களின் கவனத்திற்கு!

## கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் புலமைப்பரிசில் அறிவித்தல்



கணித மேதையும், கணணித் தமிழ் எழுத்துக்களின் பிதாமகனும், றொரன்ரோ பல்கலைக்கழக பேராசிரியராகவும் விளங்கிய அமரர் கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் அவர்கள் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள தகுதிபெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பின்வரும் தகைமைகளைக் கொண்ட மாணவர்கள் இப்புலமைப் பரிசிலிற்கு விண்ணப்பிக்கலாம்:

1. றொரன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு கற்கை நெறியாகக் கொண்ட, தமிழ் சமுகத்தில் பொதுவேலைகளில் பங்குகொண்டவர்கள்
2. பல்கலைக்கழக படிப்புக்காக நிதித் தேவையில் உள்ளவர்கள்

## Dr. Sinnathurai Vijayakumar Scholarship

To be awarded to an undergraduate student based on financial need. Preference given to students studying Tamil studies at U of T or students who are active in Tamil communities.

Recipient must:

- be a Canadian citizen/permanent resident and resident of Ontario;
- be studying Tamil studies at UofT or students who are active in Tamil Communities;
- demonstrate both academic achievement and financial need.

**Deadline to Apply: 01-Nov-22**

**https://future.utoronto.ca/scholarships/dr-sinnathurai-vijayakumar-scholarship/**

# Nathaswara Thavil Music Of Global Inc.

## நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு

25th ANNIVERSARY

# 25 வது ஆண்டு வெள்ளி விழா



தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்

நாதஸ்வர வித்துவான் கலைமாமணி மாம்பலம் திரு M.K.S சிவா அவர்கள்

தவில் வித்துவான் லயஞானதிலகம் கோவலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்





**இடம்: RICHMOND HILL HINDU TEMPLE**
**10865 BAYVIEW AVENUE, RICHMOND HILL,**
**(BAYVIEW AND ELGINMILLS)**
**(அனுமதி இலவசம்)**



**காலம்: 16 October 2022 ஞாயிற்றுக்கிழமை**

கோவிலில் காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பம், காலையிலும் மாலையிலும் கோவிலில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.
மாலை 5:00 மணிக்கு ஆலய மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வர, தவில் இசை சர்வதேச அமைப்பு 25ஆவது வருட வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறது. இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி காலை ரிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோவிலில் 1008 சங்காபிஷேகத்துடன் விழா ஆரம்பமாகிறது. காலையிலும் நாதஸ்வர, தவில் கச்சேரி நடைபெறும். அத்துடன் பாட்டுக் கச்சேரி, மிருதங்கக் கச்சேரி, வயலின் கச்சேரி, புல்லாங்குழல் கச்சேரி, பரத நாட்டியம் அனைத்தும் காலையில் நடைபெற உள்ளது. மாலையில் ஆலய மண்டபத்தில் இந்தியாவில் இருந்து சிறப்பாக வருகைதரும் விசேஷ நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது. நாதஸ்வர வித்வான் கலைமாமணி மாம்பலம் திரு. M.K.S. சிவா அவர்கள், தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G. முத்துக்குமாரசாமி அவர்கள் மற்றும் தவில் வித்வான் கோவளம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் இணைந்து வழங்கும் சிறப்புக்கச்சேரியும் அத்துடன் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் நாதஸ்வர, தவில் வித்துவன்களின் கச்சேரியும், ரொறன்ரோ நாதஸ்வர, தவில் வித்துவான்களின் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. அனைத்து குருமார்களையும் அனைத்து ஆலய நிர்வாக சபையினரையும் நாதஸ்வர தவில் கலைஞர்களையும் மற்றும் ரசிக பெருமக்களையும் வருக வருக என வரவேற்கிறது நாதஸ்வர, தவில் இசை சர்வதேச அமைப்பு.




**விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு**
**DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850**
**Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org**


ஊடக அனுசரணை
Analaiexpress TV
Analaiexpress Facebook

Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! பலரா லும் செய்ய முடியாத காரியங் களை வெற்றிகரமாக முடிப்பீர் கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனை களை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செய லாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.



ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரி யங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்க ளுக்கு பல விதத்திலும் உதவிகள் செய் வார்.




மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப் பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடு மாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர் களிடம் அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங் கள் சென்று வரவேண்டி இருக் கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டு களுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடா மல் அனுசரித்து செல்வது நல்லது. மரு த்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.



சிம்மராசி அன்பர்களே! நண்பர் களுடன் சேர்ந்து செய்யும் காரி யம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங் கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.



கன்னிராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர் கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார் கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.



துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண் டாகும். அடுத்தவர்களின் குற்ற ச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இரு க்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்திய மாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! நீங் கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப் பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புது மையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப் பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.







தனுசுராசி அன்பர்களே! கடின மான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மன தில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக் கிடையே இருந்த மனவருத்தம் குறை யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.



மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடை வதுடன் லாபகரமாகவும் இருக் கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவு க்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர் கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலு வையில் உள்ள பணம் கைக்கு கிடைக் கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.



கும்பராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண் பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயண ங்கள் சாதகமான பலனை தரும். உத்யோ கஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.



மீனராசி அன்பர்களே! ஆக்க பூர்வமான யோசனைகள் தோன றும். கடித போக்குவரத்து அனு கூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதக மான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கை யாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத் துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பதில் இருப்ப வர்களி டம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.


## பாடசாலைகளில் போதைப் பொருள்! யாருடைய...

(15ம் பக்கத் தொடர்ச்சி) நோக்கி கேட்டிருக்கிறோமா? இதுதான் பிரச்சினை.ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு சமூகத்தை மீளக்கட்டியெழுப்ப அரசியல்வாதிகளால் முடியவில்லை. சமூகச் செயற்பாட்டாளர்களால் முடியவில்லை. சமயப் பெரியார்களால் முடியவில்லை. புத்திஜீவிகள்.படைப்பாளிகள், ஊடகங்களால் முடியவில்லை.

போதைப்பொருளிலிருந்து பிள்ளைகளை விடுவிப்பதென்றால் புனர்வாழ்வும் மட்டும் போதாது. தண்டனைகளால் பலன் இல்லை. மாறாக சமூகத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். விழுமியங்களை மீழுருவாக்க வேண்டும்.இளையோர் பிரமிப்போடு பார்க்கும் முன்னுதாரணம் மிக்க தலைவர்கள் மேலெழ வேண்டும். திரைப்பட நாயகர்களையும் சண்டியர்களையும் முன்னுதாரணமாகக் கொள்ளும் வெற்றிடம் ஏன் ஏற்பட்டது? எனவே இளையோரை இலட்சியப்பற்று மிக்கவர்களாகவும்.உன்னதமான சமூகக் குறிக்கோளை நோக்கி எய்யப்பட்ட அம்புகளாகவும் மாற்றுவதற்கு தனியாக ஆசிரியர்களால் மட்டும் முடியாது.மருத்துவர்களால் மட்டும் முடியாது. உளவளத் துணையாளர்களால் மட்டும் முடியாது.புனர்வாழ்வு நிலையங்களால் மட்டும் முடியாது. அது ஒரு கூட்டுப் பொறுப்பு.

ஜெனிவாவில் அரசாங்கத்தை பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கும் ஒரு மக்கள் கூட்டமானது, சமூகச்சீரழிவுகள் பொறுத்து தனக்குள்ள கூட்டுப் பொறுப்பையும் உணர வேண்டும் கீழிருந்து மேல் நோக்கிய சுய பாதுகாப்புக் கவசங்களைக் கட்டி யெழுப்ப வேண்டும்.

## வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு!

(17ம் பக்கத் தொடர்ச்சீ0 இப்படி வாசிப்பின் சிறப்பைப் பற்றி பல தலைவர்களும் மேதைகளும் சொல்லியுள்ளனர். உங்கள் பிள்ளைகளை பாதுகாப்பதற்கு புத்தகங் களை வழி காட்டியாகப் பயன்படுத்தக் கற்றுக் கொடுங்கள். பாடசாலைகளில் நூலகங் கள் உண்டு. பிரதேச ரீதியாகவும் நூலகங்கள் உள்ளன. இதைவிட நீங்களே வீட்டி லும் நூலகங்களை உருவாக்க முடியும்.

வாசிப்பைப் போல, இசைத்துறையில் பயில்தல், ஓவியம் வரைதல், நடனத்துறையில் ஈடுபடுதல், விளையாட்டுகளில் பங்குபற்றுதல், சமூக வேலைத்திட்டங்களில் ஆர்வத் தோடு செயற்படுதல், எழுத்துத்துறையில் இயங்குதல், ஒளிப்படங்களை (புகைப்படங் களை) எடுத்தல், விவாதங்கள், கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல், உடற்பயிற்சி யில் (யோகாசனம், ஜிம்) ஈடுபடுதல் எனப் பலவற்றில் ஈடுபடுத்துவதன் மூலம் பிள்ளைகளின் ஆற்றலும் பெருகும். அறிவும் வளரும். நல்ல விளைவுகளும் கிட்டும். நலமும் கிடைக்கும்.

இது குறித்து நாம் தீவிரமாகச் சிந்திப்பது அவசியமாகும். இதொன்றும் கடினமான தல்ல. அத்தனையும் இலகுவானவை. இந்தத் துறைகளில் பிள்ளைகள் ஈடுபட்டுப் பிரகாசிக்கும்போது அவர்களுக்கும் நன்மை கிட்டுகிறது. பெயரும் புகழும் பொரு ளாதார வளமுமாக வாழ்க்கை செழிக்கிறது. பிள்ளைகள் சுய அறிவைப் பெறுகின்ற னர். பின்னர் அவர்களை யாரும் ஏமாற்ற முடியாது. எந்தப் போதைக்கும் அவர்கள் அடிமையாக மாட்டார்கள்.

மனிதர்களை மீட்டு வளப்படுத்தி மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கே விளையாட்டு, கலைத்துறை, இலக்கியம், வாசிப்பு போன்றவை உள்ளன. உலகம் முழுவதிலும் இதற்காகவே பெருமளவு நிதியும் ஆற்றலும் செலவழிக்கப்படுகிறது. தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், நூலகங்கள், சினிமா, யுரியுப் சனல்கள், சமூக வலைத்தளங்கள், இணையங்கள் என ஏராளமாக விரிந்து போயிருக்கின்றன பல்வகையான ஊடகங்கள். தாங்களும் மகிழ்ந்து பிறரையும் மகிழ் விக்கும் வாழ்க்கை இதுவாகும். ஆகவே நாம் இன்றே விரைந்து செயற்படுவோம். பிள்ளைகளைப் பாதுகாப்பது என்பதே நம்மைப் பாதுகாப்பதாகும். இனத்தையும் பண்பாட்டையும் தேசத்தையும் பாதுகாப்பது என்றால் இளைய தலைமுறையைப் பாதுகாப்பதே வழி.

## பறி போகும் கேந்திர முக்கியத்துவம்

(18ம் பக்கத் தொடர்ச்சி) சிட்டகொங்- டுபாய் இடையிலான நேரடி கப்பல் சேவை மூலம், சரக்கு பரிமாற்றக் காலத்தை மூன்றில் ஒரு பங்கு நாட்களாக குறைத்துக் கொள்ள முடிகிறது என்றால், அந்த இழுபறியில் கணிசமான காலம் கொழும்பு துறைமுகத்தில் ஏற்படுகிறது என்றே அர்த்தம். கொழும்பு துறை முகத்தை நவீன மயப்படுத்துவதில் அசமந்தப் போக்கு காண்பிக்கப்பட்டதும், அபிவிருத்தி செய்யும் திட்டங்களை முன்னெடுப்பதில் போதிய அக்கறை செலுத் தப்படாததும், எதிர்ப்புப் போராட்டங்களும் கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் குறைவதற்கு முக்கிய காரணம்.

கிழக்கு கொள்கலன் முனையத் திட்டம் ஏற்கனவே திட்டமிட்டபடி நிறை வேற்றப்பட்டிருந்தால், தற்போது அது செயற்பாட்டுக்கு வந்திருக்கும்.அது இவ் வாறான தாமதங்களை குறைப்பதற்கு வழியை ஏற்படுத்தியிருக்கும். அத்துடன் மாற்றுத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளையும் குறைத்திருக்கும்.

தற்போது கூட இந்தியாவின் அதானி குழுமம், கொழும்பு துறைமுகத்தில் முத லீடு செய்வதற்கு எதிர்ப்புகள் உள்ளன. இவ்வாறான எதிர்ப்புகளின் ஊடாக முக்கியமான துறைமுகங்களைக் கொண்டிருந்தும், அவற்றின் ஊடாக சரியான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையே ஏற்படும்.

இந்தியா தனது துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு முன்னதாக, கொழும்பு துறைமுகம் தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ளாவிட்டால், இதன் கேந்திர முக்கியத்துவம் பறிபோவது தவிர்க்க முடியாததாகி விடும்.

## தமிழகத்தின் நச்சு அரசியல் சக்தி!

(20ம் பக்கத் தொடர்ச்சி) விளக்காமல், இந்து மத வெறுப்பு விடயங்களுக்கு முக்கி யத்துவம் அளித்து தொடர்ந்து வெறுப்பு அரசியலில் ஈடுபட்டு வருகிறது. மேலும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் பேரணியை அனுமதித்திருப்பதன் மூலம், இனி தமிழகத் திலும் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார் போன்ற வட இந்தியாவில் 'கலாசார காவலர்கள்' என்ற பெயரில், தடி எடுத்து, கும்பல் வன்முறை நடைபெறுவது தொட ரும் என்று அவதானிக்கப்படுகிறது. சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யும் தி.மு.க. அரசு இதுபோன்ற 'நச்சு அரசியல் சக்தி'களுக்கு சாதாரண எச்சரிக்கையை விடாமல், சட்டத்தின் மூலம் இரும்பு கரம் கொண்டு அடக்கி, மக்கள் நலன் சார்ந்த அரசாக திகழ வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

(6ம் பக்கத் தொடர்ச்சி) என்ற அடிப்படையில் பேசியிருந்தாலும் அதற்கு மாறான செயற்பாடுகளே எமது தமிழர் பிரதேசத்திலே நடந்து கொண்டிருக்கின்றன. னவே இந்த நாட்டில் சமாதானம் சமத்துவம், சகோதரத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமானால் தமிழர் பிரதேசங்களிலே இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புகள், மத ரீதியான அடக்குமுறை என்பன நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு — HOME

வாகனம் — AUTO

மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE

படகு — BOAT

கனரக வாகனம் — TRAILER

**காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்**





TR

FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!

**THUSHANTHAN RAVINDRAN**

**647-401-2653**



Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

HomeLife

**Ravi. Paramu**
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி

NON-MEDICAL INSURANCE

நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!



**ARUN KULASINGAM**
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

KABIS

- Life Insurance
- Critical Illness
- Disability
- Mortgage Protection Insurance
- Travel Insurance (Super Visa)
- RESP
- RRSP

Foresters | IA Industrial Alliance | Assumption Life



OVER 10 YEARS EXPERIENCE
**RAVI VEERASINGAM B.A**
Sales Representative
416-356-8958

BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE

**ARVIN-KING**
RABINTHIRARAJ
Broker
416-200-7001

TALENT - PATIENCE

HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES

$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

**அபாயம் உண்மையாகலாம்.**

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

**BENEFITS PAID BY GENDER** Women 54% Men 46%

Industry critical illness claim breakdown




iA Financial Group

**AJITH SABARATNAM**
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

